திருக்கோயில்

செப்டம்பர்
2003

விலை
ரூ 7.00

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் ஏப்ரல் மாதச் சம்பளத்தைச் சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், மே மாதச் சம்பளத்தைத் திருவெள்ளறை அருள்மிகு புண்டரிகாட்சப் பெருமாள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், ஜூன் மாதச் சம்பளத்தை ஏந்தல் அருள்மிகு நீலகண்டப் பிள்ளையார் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும் வழங்குகிறார்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

மாலை 45	திருவள்ளுவர் ஆண்டு 2034	சுபானு - புரட்டாசி செப்டம்பர் 2003	மணி 9

சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

"திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

வினைகளெலாம் தீர்த்தருளும் விநாயகப் பெருமான்

பொருளடக்கம்

கோவில் யானைகளுக்கு நலவாழ்வு முகாம்
- மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள்

தாயுமானவரின் தத்துவங்கள்
- திருமிகு பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அரசுச் செயலாளர்

திருமந்திர உபதேசம் - திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

ஆன்மீகம் - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

திருஞானசம்பந்தர் அருளிய மூன்றாம் திருமுறை
- முனைவர் த. அமிர்தலிங்கம்

திருவருள் நல்கும் திருஆலங்குடி திருத்தலம்
- கோ. சிவஞானம்

நவகிரகத் துதிப்பாடல்கள்
- கவிஞர் குமரவிருச்சிகன்

நூற்றி எட்டு விநாயகர் தரிசனம்
- டாக்டர் டி. செல்வராஜ்

புதுமைகள் பல மொழியும் சேலம் அன்னதானப்பட்டி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்
- ஆலய வெளியீடு

ஆஞ்சநேயா! ஆத்மநேயா! - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 28334811, 28334812, 28334813

கோவில் யானைகளுக்கு நல வாழ்வு முகாம்

- மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

இயற்கையின் ஓர் அங்கமாக மனிதர்கள் மட்டுமல்லாமல் விலங்குகளும், மரம், செடி, கொடிகளும் உள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பயிர்களுக்காகக் கூட பரிதாபப்பட்ட வள்ளலார் போன்ற பெருமக்கள் வாழ்ந்த பூமி இது. மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான் என்ற அடிப்படையில் விலங்குகளிடத்தில் நான் கொண்டிருக்கும் அன்பும், கருணையும் அனைவரும் அறிந்தது தான்.

மைலாப்பூரில் ஒரு யானை, யானைப்பாகனால் கடுமையாக நடத்தப்படுவது குறித்தும் பிச்சை எடுப்பதற்கு அதனை முறைகேடாக பயன்படுத்துவது குறித்தும் என் கவனத்திற்கு வந்தபோது மருத்துவச் சிகிச்சையும், அடைக்கலமும் அளிப்பதற்காக அந்த யானையை வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு நான் அனுப்பி வைத்தேன். அந்த யானைப் பாகன் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டேன். அதன் தொடர்ச்சியாக, யானைகள் முறையாகப் பராமரிப்பது பற்றி விரிவான அறிவுரைகளை வழங்கி உள்ளேன்.

நம்முடைய மத நம்பிக்கையின் அடையாளம் ஆகவும், வழிபாட்டுச் சடங்குகளில் ஓர் அம்சமாகவும் விளங்கும் யானைகள், நம்முடைய கவனத்திற்கும், கருணைக்கும் உரியவை ஆகும். அந்த வகையில் தமிழ்நாட்டில் திருக்கோவில்களில் உள்ள யானைகளின் பராமரிப்பைப் பற்றியும், அவைகள் நடத்தப்படும் முறைகளைப் பற்றியும் ஆராய்வதற்காக 25.8.03 அன்று தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை, வனத்துறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் கூட்டம் ஒன்றை நான் நடத்தினேன். அந்தக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

திருக்கோவில்களில் யானைகள், பராமரிக்கப்பட வேண்டிய முறைகள் பற்றிய விதிகளை வகுக்க, இந்து சமய அறநிலையத் துறைக்கு நான் ஆணையிட்டுள்ளேன். யானைகளின் உடல்நலத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கவும் தேவையான மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கவும் திறமைவாய்ந்த கால்நடை மருத்துவர்களைக் கலந்து ஆலோசிக்க இந்து சமய அறநிலையத் துறைக்கு அறிவுரை வழங்கியுள்ளேன்.

யானைகள் சீரற்ற கடினமான தரையில் நிற்க வைக்கப்படுவதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவற்றின் கால்களில் சிராய்ப்போ, புண்ணோ ஏற்படாதவாறு மண் தரையில் அல்லது புல் வெளியில்தான் அவை நிறுத்தப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் நிழலில்தான் அவை நிறுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளேன்.

குடிப்பதற்கும், குளிப்பதற்கும் போதுமான அளவு தண்ணீர் வழங்கப்படுவதன் மூலம் யானைகளின் உடலும் உள்ளமும் எப்போதும் குளிர்ச்சியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளேன்.

திருக்கோவில்களில் யானைகளைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல் ஒரு நாளில் குறிப்பிட்ட கால அளவுக்கு மட்டுமே அவை பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும், அவற்றிற்குப் போதுமான ஓய்வு தரப்பட வேண்டும் என்றும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களில் பராமரிக்கப்பட்டு வரும் 41 யானைகளுக்கும் இந்த ஆண்டு முதல், ஆண்டுக்கொருமுறை ஒரு மாத கால அளவிற்கு யானைகளுக்கு நலவாழ்வு முகாம் நடத்தப்படும். அங்கு தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் உள்ள அனைத்து யானைகளும் கொண்டுவரப்பட்டு அவற்றின் உடல் நிலை பேணப்படும், புத்துணர்ச்சி அளிக்கும் பணி மேற்கொள்ளப்படும். அந்த ஒரு மாத காலத்தில் யானைகளுக்கு புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் அளிக்கப்படும்.

அவற்றின் உடல் நலமும், மனநலமும் பேணப்படும். வழக்கமாக ஆற்றிவரும் வேலைப்பளுவிலிருந்து அந்த ஒரு மாத காலத்திற்கு அவற்றிற்கு முழு ஓய்வு அளிக்கப்படும். ஒரு மாத காலம் அளிக்கப்படும் ஊட்டச்சத்துள்ள உணவின் மூலமும், ஓய்வின் மூலமும் இந்த யானைகள் திருக்கோவில்களுக்கு திரும்பச் செல்லும் போது புத்துணர்ச்சியோடு தங்கள் பணிகளை மேற்கொள்ள இயலும். அதிக வருமானமுள்ள திருக்கோவில்களின் நிதியிலிருந்து இதற்கான செலவு மேற்கொள்ளப்படும்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், வனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர், சுற்றுச்சூழல்

திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 15.8.2003 அன்று சுதந்திரத் திருநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு நிதியமைச்சர் திருமிகு சி. பொன்னையன் அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித் தார்கள். நம் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. மற்றும் அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்களும், கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி. பி.எல். அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

மற்றும் வனங்கள் துறை செயலர், இந்து சமய அறநிலையத்துறைச் செயலர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று, கேரள மாநிலம் குருவாயூருக்குச் சென்று, அங்கு யானைகள் பராமரிக்கப்படும் முறையினை பார்வையிட்டு, அரசுக்கு அறிக்கைச் சமர்ப்பிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் யானைகளுக்காக நடத்தப்பட இருக்கும் ஒரு மாத நலவாழ்வு முகாமிற்கான செயல்திட்டம் வகுக்கப்படும். இந்த முகாமிற்காக நீர் வசதி கொண்ட, ஏற்றச்சுற்றுச் சூழல் அமைந்த இடம் ஒன்று தெரிவு செய்யப்படும்.

எல்லா யானைப் பாகர்களுக்கும் யானைகளை அன்புடன் பராமரிப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் சிறப்புப் பயிற்சி தனியாக அளிக்கப்படும்.

தொடர்ச்சியாக யானைகள் நலனில் கருத்து செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை, வனத்துறை ஆகியவற்றின் அதிகாரிகளைக் கொண்ட ஒரு ஒருங்கிணைப்புக் குழுவினை அமைக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

நம்முடைய அன்புக்கும், ஆதரவுக்கும் உரிய விலங்குகளை சிறந்த முறையில் பராமரிப்பது நம்முடைய கடமையாகும்.

குறிப்பாக நிலத்தில் வாழும் உயிர்களில் மிகப் பெரியனவாகவும், மனிதர்களுக்கு உதவிக்கரமாகவும் உள்ள யானைகளைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் நமது இன்றியமையாத கடமையாகும்.

★★★

தாயுமானவரின் தத்துவங்கள்

திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அரசுச் செயலாளர்
தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மய மாய் வாழ ஆசைப்படுகின்றான் மனிதன். விலங்குகளும் மற்றும் அனைத்து ஜீவராசிகளும் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

பட்டம் பெற்றவன் பட்டமேற் படிப்பு படித்தால் அது ஆசையல்ல. வாழ்க்கையின் அடித்தளம். மாறாக ஒரு வீடு கட்டியவன் ஐந்து வீடு கட்ட விழைவது பேராசை. அதுவும் பிறர் மனம் புண்படச் செய்து வாழ்க்கை வளம் சேர்ப்பது என்பது மனித தர்மத்திற்கு மாசு கற்பிப்ப தாகும். எனவே ஆசை வேண்டாம் என்கின்றார்கள் அறிஞர்கள். துன்பத்திற்குக் காரணமே ஆசைதான். பேராசை பெருநஷ்டம். ஆசையை அகற்றிவிடு. ஆனந்த மாய் வாழ்வாய் என்கின்றன நீதி நூற்கள்.

ஆசைக்குளர் அளவுஇல்லை; அகிலம்எல் லாம்கட்டி
ஆளினும், கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்,
நேசித்து, ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்,
நிலையாக வேஇன்னும் காயகற் பம்தேடி,
நெஞ்சுபுண் ஆவர்; எல்லாம்
யோசிக்கும் வேளையில், பசிதீர உண்பதும்,
உறங்குவதும் ஆகமுடியும்;
உள்ளதே போதும்; நான் நான் எனக் குளறியே,
ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல், மனதுஅற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்!
பார்க்கும்இடம் எங்கும், ஒரு நீக்கம்அற நிறைகின்ற,
பரிபூர ணானந்தமே!

என்பது தாயுமானவரின் அமுதப் பாடல் ஆகும்.

அப்பேர்ப்பட்ட ஆசைகளை அடக்கப் புலனடக்கம் தேவை. புலனடக்கம் என்பது எளிதான செயல் அல்ல. அறமும், அன்பும், இரக்கமும் ஈகையும் கொண்டவர்கள் தான் புலனடக்கம் கொள்ள முடியும்.

பற்றற்ற வாழ்க்கைதான் மற்றவர்கள் நம்மீது பற்று வைக்க தூண்டுகோலாக அமையும். இதையெல்லாம் வலியுறுத்தி பல்வேறு காலகட்டங்களில் பல ஞானிகள் தோன்றியுள்ளனர். தமது வாழ்க்கையில் பட்ட துன்பங் கள் துயரங்கள் எல்லாவற்றையும் தொகுத்து வாழ்க்கை முறைத் தத்துவங்களாக வகுத்தளித்த வல்லவர்கள் பலர். அவர்களில் 15,16ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து மறைந்த மகரிஷி தாயுமானவர் மிகவும் முக்கியமானவர் ஆவார்.

எம்மதமும் சம்மதம்

தாயுமானவர் எம்மதமும் சம்மதம் என்னும் கருத்தை மிகவும் நேசித்தவர். இன்றைக்கு நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் மதப் பூசல்கள் அன்றே தாயுமானவர் எதிர் பார்த்தவை போலும். அனைத்து தர்மங்கள் போதிக்கக் கூடிய உண்மைக் கருத்துக்களை அறிய முற்பட்டார். அனைத்துச் சமய மக்களையும் கூட்டினார். உலகாயதர், பௌத்தர், அருகர், சாங்கியர், பதஞ்சலர், தார்க்கிகர், மீமாம்சகர், பாஞ்சராத்திரர், - ஏகான்மவாதியர், பாசுபதர், மாதவிரதர், கபாலிகர், வாமமார்க்கியர், பைரவ மார்க்கியர், பாடணவாத சைவர், பேதவாத சைவர், சிவ சமவாத சைவர், சிவசங்கிராந்த வாத சைவர், ஈஸ்வர விகார வாத சைவர், சிவாத்துவித சைவர் என்னும் அனைத்துச் சமயத்தவர்களும் கூடினர். திருச்சிராப்பள்ளி யில் தத்தம் கொள்கைகளை எடுத்துரைத்து வாதாடினர். ஆனால் சமயம் ஒன்றே என்றார் நம் தாயுமானவர்.

செப்பரிய சமய நெறி எல்லாம் தம்தம் தெய்வமே தெய்வம் என்னும் மதவாதம் கண்டு மனம் புழுங்கினார் தாயுமானவர். அவர் அவற்றின் உண்மையை அறிய நாட் டங் கொண்டார்.

தாயுமானவர் ஞான யோகம், கர்ம யோகம் போன்ற வற்றில் அளவிடற்கரிய ஈடுபாடு கொண்டு மனித சமுதாயத்திற்கு அரிய பெரும் தத்துவங்களை விட்டுச் சென்றுள்ளார். விஜய ரகுநாத சொக்கலிங்க நாயகர் காலமான போது அவரது அரசி மீனாட்சி ஆட்சிப் பொறுப்பேற்றார். அரசருக்குத் துணையாக இருந்த தாயுமானவர் அரசிக்கும் துணையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தினார். அரசி தாயுமானவர் மேல் நாட்டம் செலுத்துகின்றார். அது கண்ட தாயுமானவர்



தமது தவநிலைக்கு தாழ்வு ஏற்படும் என அறிந்து பணிதுறந்து செல்கின்றார். தமது குருநாதர் சொன்ன ''சும்மா இரு'' என்னும் தத்துவத்தைக் கடைப் பிடித்து பூரணமாக அவர் தமது பணியில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். மெய் வருத்தம் பாரார், கண்துஞ்சார், பசி நோக்கார், கருமமே கண்ணாயினார் என்னும் வாக்கிற் கேற்ப தாம் கொண்ட பணியில் தம்மை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டார் தாயுமானவர். ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே'' என மனித சமுதாயம் முழுவதும் மேம்படத் தம்மைத் தந்தார் தாயுமானவர்.

தத்துவ முறைகள்

மனித மனம் பல்வேறு வகைகளில் அலைக்கழிக்கப் படுகின்றது. மனிதன் ஐம்பூதங்களாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் போன்றவற்றால் எல்லை யில்லாத் துன்பத்தை அனுபவிக்கிறான். சப்த, பரிச, ரச, ரூப, கந்த என்னும் ஐம்புலன்களால் ஆட்கொள்ளப் படுகின்றான். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளால் அடிமையாக்கப்படுகின்றான். வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆகிய மாயைகளால் மனிதன் சிக்குண்டிருக்கின்றான். மனம் என்பது குரங்கு போன்றது. குரங்கு கிளைதோறும் குதித்துத் தாவறது போல மனித மனமும் தாவுகின்றது. வேட்டைக்காரன் சுற்றி விலங்குளைப் பிடிக்கும் காடு போல கரடு முரடாக உள்ளது. பிறப்பு இறப்பு என்னும் இரண்டு கோட்பாடுக்குள் அடக்கப்பட்டு அமைதி கெடுகின்றது. பாம்பின் வாயில் அகபட்ட தேரை போல மனம் பரிதவிக்கின்றது.

''விடங்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படங்கொண்ட பாந்தள் வாயிற்
பற்றிய தேரை போலும்''

என்று கம்பநாடன் இராவணன் நிலை பற்றிப் பாடியுள்ளது போல் இராவணன் பட்ட துன்பம்போல் புலன்வழி சென்ற மனித மனமும் அல்லல்கள் பட நேரிடுகின்றது.

அகங்காரம் என்றும், அசுரகுணம் என்றும், சீரழிவில் அகப்பட்டு யானை வாயில் உள்ள கரும்பு போல அல்லல் களை அனுபவிக்கின்றது. பேரலை வீசும் பெருங் கடலில் சிறு துரும்பாய் அலைகள் கொடுக்கும் அடிகளை எல்லாம் தாங்கிக் கொண்டு அங்கும் இங்கும் அலை கின்றது. காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் வித்தியா போகத்தில் துய்த்து நிம்மதியை இழக்கின்றது மனித மனம். சுத்த வித்தை,



மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சுதந்திரதினம் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திருமிகு நயினார் நாகேந்திரன் அவர்களும், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு செ.ம. வேலுசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு அலுவலர் திருமிகு வை. பாண்டியன் இ.ஆ.ப. மற்றும் இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. இராஜா பி.எஸ்.சி., பி.எல்., அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் துணை ஆணையர் / செயல் அலுவலர் ந. திருமகள் பி.எஸ்.சி., எம்.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

ஈஸ்வரம், சதாக்கியம், விந்து, நாதம் போன்ற சாதாரண மனித வாழ்க்கை நிகழ்வுகளில் சிக்கி மனித மனம் சீரழிகின்றது. பொல்லாத காமப் புலைத் தொழிலில் புகலிடம் தேடி மனித மனம் அலைகின்றது. கீழ்க்குடி யாய் வாழ்வதும், சோம்பலின் சுக பூமியாய் மனிதன் வாழ்வதும் அன்றாடம் மனிதன் காணும் நிகழ்ச்சியாகும்.

உடல், மனம், உலகம் போகம் ஆகிய நான்கனுள் மனிதன் உழலல்கின்றான். ஆக மொத்தத்தில் மனிதன் பல் வேறு சஞ்சலங்களில் தும்பியாய்த் துடிக்கும் வழக்கமான நிலையை காண்கின்றோம். குறிப்பாக இந்த நவீன காலத்தில் ஆன்மீகமும், அறநெறியும் கேள்விக் குறியாக் கப்பட்டு, பொன்னும் பொருளும் மனிதனின் புகலிட மாய் இருப்பதால் நிம்மதியற்ற வாழ்க்கையில் மனிதன் நிதம் கழிக்கின்றான். இவைகளை நீக்கினால் தான் மனித வாழ்க்கையின் மகத்துவம் புரியும். அர்த்தம் தெரியும். அதைத் தான் தாயுமானவர்

''மாயா விகார மலம் ஒழு, சுத்தாவஸ்தை
தோயா அருளைத் தொடருநாள் எந்நாளோ?''

என்று எந்நாள் கண்ணி என்னும் பதிகத்தில் பாடு கின்றார். இவைகளை நீக்கப் புலனடக்கம் தேவை - பேராசைவிடு பட வேண்டும். சுக்கிலமும், நீரும், சொரி மலமும் நாறும் உடலும் கொண்ட மனித அமைப்பின் மீது பற்று வேண்டாம். இறந்த பின் காக்காய், நரி, செந் நாய், கழுகு உண்ணும் உடல் மீது தேவையற்ற ஆசை வேண்டாம். மெய் வீசும் நாற்றம் கொண்ட உடலை மஞ்சளால் மறைத்துப் பொய்யுருவம் கொண்டிருக்கும் பேதையின் மீது ஆசை வேண்டாம். தம்மைப் பற்றி அறிந்து தம்மால் தம்மையே ஆளும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மெய்ஞ்ஞானம் பெற்று, தன்னைத்தான் அறிய வேண்டும். அன்பு ஒழுகி அறச் சிந்தனைகளோடு வாழ்ந்தால் ஆனந்தம் தாண்டவமாடும் என்பது தாயுமானவரின் கணிப்பு ஆகும்.

அப்பேர்ப்பட்ட ஆனந்த நிலையை அடைய ஆண்ட வனை அனுதினமும் வணங்க வேண்டும். அதை தாயுமானவர் பெருமான்

''அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆர்அமிர்தே! என்கண்ணே! அரிய ஆன
பொருள் அனைத்தும் தரும் பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்ற ஒன்றே! புனித வாழ்வே!
கருத்தரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்
காலமும் தேசமும் வகுத்துக் கருவி ஆதி
விரிவினையும் கூட்டி உயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே! யான்சொலும் விண்ணப்பம்
கேளே!''

என்று இறைஞ்சுவார். பற்றற்றான் பற்றினைப் பற்றிப் பார் போற்றும் வாழ்வை - தாயுமானவர் வகுத்த இலக்கண வரம்போடு வாழ்வோம். நாம் வளம் பெறுவோம்.

★★★

திருமந்திர உபதேசம்

- ''திருமந்திரச் செம்மல்'' திருமிகு T.V. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

3

திருமந்திரம்

திருவாவடுதுறையைச் சேர்ந்து அங்கிருந்த திருக் கோயிலில் மேற்கு பக்கத்தில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் நிட்டையில் அமர்வதற்கு முன், அவ்வூர் பொதுமடத் தில் திருமூலர் பெருமான் தங்குகின்றார்.

அவரைப் பார்க்க வந்த அச்சிற்றூரைச் சேர்ந்த சான் றோர் பெருமக்கள் அவரைக் கண்டு நன்கு ஆராய்ந்து இறந்துபோன மூலன் மனைவியிடம் ஒரு உண்மையைத் தெரிவிக்கின்றார்கள்.

இந்த யோகியார் உலகப் பற்றுக்களை எல்லாம் நீக்கி யவர் எனவும், இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்து இன்பம் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்றவர்களில் இவரும் ஒருவர் என்றும், முற்றும் உணர்ந்தவர் என்றும் திருமூலரைப் பற்றிக் கூறுகின்றார்கள்.

எனவே அத்தகைய நிலையில் திருமந்திரம் முழுவ தையும் உணர்வு நிலையில் இருந்து திருமூலர் பெருமான் அருளிச் செய்கின்றார் என்பது நமக்குத் தெளிவாகின்றது.

அறிவுவேறு, உணர்வு வேறு, வேதங்களையும், ஆக மங்களையும், திருமுறைகளையும் நன்கு கற்றவர்களாக அவற்றில் காணப்படும் பல்வேறு நுட்பங்களை அறிவின் அடிப்படையில் தம்முள் விளக்கிக் கொண்டு பிறருக்கு விளக்குவது என்பது ஆன்ம சாதனையிலே ஒரு கட்டம் எனலாம்.

ஆனால் அத்தகைய அறிவு வரம்புடையது. அதிலே கிடைக்கும் தெளிவு ஓரளவு மட்டுமே உண்மையை விளக்கும்.

புலன் அடிப்படையிலும், உட்கருவிகளின் இயக்கத் தாலும் கிடைக்கும் இத்தகைய அறிவினால் மெய்ப் பொருளைப் பற்றிய ஞானவிளக்கத்தைப் பெற இயலாது.

புலன்களுக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்ட இறைவனை அவனுடைய திருவருளாலேதான் தெரிந்து கொள்ள இயலும். திருவருள் துணைபுரிந்து மலங்களை எல்லாம் நீக்கிய நிலையில் ஆன்மாவானது ஞானாசிரி யரின் அருளையும் உபதேசத்தையும் பெற்று அவற்றிலே தோய்ந்து நின்று தன்னை அவற்றில் மறைத்துக் கொள்ளும் இயல்பினைப் பெறும் பொழுது அங்கே பரம்பொருளைப் பற்றிய உண்மையானது புலப்படத் தொடங்குகின்றது.

மெய்ப்பொருளைப் பற்றிய முடிவான விளக்கத்தை உணர்வு நிலையிலேதான் அனுபவிக்க முடியும் என்று அருளாளர்கள் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

உணர்வு நிலையிலே இருப்பவர்களுக்கு உலகத்தைப் பற்றிய உண்மையும், தன்னிலை விளக்கமும் திரு வருளால் தரப்படுகின்றன.

அதிலே மேலும் ஆழ்ந்து நிற்பவர்கள் பரம்பொரு ளின் ஞானத்தை உள்ளார்ந்த நிலையில் பெறுகின்றார்கள்.

இந்த அனுபவமே ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம் ஆகும்.

திருமூலர் பெருமான் அத்தகைய நிலையில் இருந்தார் என்பதை அவ்வூர் நன் மக்கள் தெரிந்து கொண்டு இருந்தார்கள்.

கற்று அறிவு பெற்ற பெரியோர்களுக்குப் புலப்படாத சில உண்மைகள் பாமரமக்களுடைய உள்ளத்திலே எளிதாகவும் இயல்பாகவும் தோன்றுவதை நாம் பார்க் கின்றோம். அதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

திருக்கயிலை மலையிலே வாழும்போது நான்மறை யோகியாக இருந்த திருமூலர் கற்றறிவு பெற்றவராக இருந்தார். வேதங்களையும் ஆகமங்களையும் நன்கு தெரிந்து கொண்டிருந்த நிலையில் அவருடைய கல்வி அறிவு, அவருக்கு ஒரு வகைப் பயனை அளித்திருக்க லாம்.

ஆனால் அந்த அறிவினை அனுபவம் ஆக்கும் வாய்ப்பினை அவர் பெற்றிருக்கவில்லை.

அகத்திய முனிவரைத் தரிசிக்க வேண்டி அவர் தென்னாடு வந்து அடைகின்றார். அவர் எண்ணியிருந்த படி அகத்தியரைப் பார்த்ததாகத் தெரியவில்லை.

அவருடைய அறிவின் நுட்பங்களை அனுபவம் ஆக்கும் வாய்ப்பு அவருக்கு தில்லையிலே கிடைக்கின்றது.

திருமூலர் பெருமான், எல்லா உலகுக்கும் அருள் பாலித்து உயிர்களை எல்லாம் உய்ய வைக்க தில்லையிலே நடமாடும் சிவப்பரம் பொருளின் ஆனந்தக் கூத்தை மெய்யுணர்வின்கண் அனுபவித்து அவ்விடத்தை விட்டு நீங்க மனம் இல்லாமல் பலகாலம் தங்கியுள்ளார்.

அறநெறியின் அடிப்படையிலும் அன்பின் வழியிலும் உலகம் இயங்க வேண்டும் என்பதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு சிவப் பரம்பொருள் தன்னுடைய ஐந்தொழில் இயக்கத்தைத் தில்லையிலே நடத்திவரும் மாண்பினைத் திருமூலர் பெருமான் அனுபவித்த பொழுது அவருடைய உள்ளத்திலே சீவராசிகள் வினைக் கடலைத் தாண்டுவதற்காக இப்பேரியக்கத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொள்வது மட்டுமின்றி சிவ பெருமானின் திருவருளை நாடியே தங்கள் பயணத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்கின்ற உண்மையைத் திருமூலர் பெருமான் தில்லையிலே அனுபவிக்கின்றார்.

அடுத்து **மூலன் உடல் புகுந்த நிலை** பற்றிச் சிந்திப்போம்.

எந்த ஒரு அனுபவமும் இறைவனால் தரப்பட்ட உடல், உள்ளம் ஆகிய கருவிகளின் துணையோடுதான் நிகழ்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டுவதே இந்தப் பரகாயப் பிரவேசம்.

பரகாயப் பிரவேசத்தின் வாயிலாகத்தான். திருமூலர் ஆகிய யோகியார், இறைவனின் பிரபஞ்ச இயக்கத்தை உடல், உள்ளம், உயிர் ஆகியவற்றின் பரிணாமங்களாகவும், படிநிலை' வளர்ச்சிகள் ஆகவும் உணர்ந்து கொள்கின்றார்.

அந்த உணர்வின் வெளிப்பாடே ''திருமந்திர மாலை'' ஆகும்.

அந்த உணர்வின் சிகரமாக அமைவது எல்லா உயிர்களும் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு சிவமாம் தன்மையைப் பெற்றுச் சிவப் பரம்பொருளின் திருவடி நிழலிலே தங்களை அமர்த்திக் கொள்வது ஆகும்.

உயிருக்கு முன்னிருந்த நிலை, மலமுடைய நிலை. மேய்ப்பாரின்றி வெறியுடன் திரியும் நிலை. கட்டுக்கடங்காத உணர்ச்சிகள் புலன்வழிவந்து உயிரினை ஆட்டி வைக்கும் நிலை.

இவை எல்லாம் மாற வேண்டும் என்றால் திருவருளின் துணை வேண்டும்.

இறைவன் உயிரினை அடக்கி வைக்கின்றான். ஆணவ மலத்தைத் தேய்த்து விடுகின்றான். தன்னோடு இணைத்துக் கொள்கின்றான். தன்னுடைய திருக்கூத்தின் உண்மை இயல்பை உயிருக்குத் தெரிவிக்கின்றான்.

இதுகாறும் பெற்றிராத இன்பத்தையும் நல்குகின்றான். இதுவே திருவருளின் பணி ஆகும்.

இந்த அனுபவத்தைத் திருமூலர் பெருமான் முற்றிலும் பெற்றிருந்தார். அவரே கூறுவது

''அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
இடங்காண் பரானந்தத் தேனென்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படர்ந்தான் பெய் துள்ளுட் படிந்திருந் தானே.''

தன்னுள் படிந்திருக்கும் இறைவனை காரைக்கால் அம்மையார் சோதியாகக் காணுகின்றார்.

''காண்பார்க்குங் காணலாம் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற் - காண்பார்க்குச்
சோதியாய் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன்''

(அற்புதத் திருவந்தாதி,

எனப் பாடுகின்றார்.

தன்னுள் இருக்கும் இந்தச் சோதியை மலமுடைய நிலையில் உயிர் தெரிந்து கொள்வது இல்லை. மலம் நீங்கித் திருவருள் சேரும் பொழுது உயிரின் அருட்கண்கள் விழிப்படைகின்றன. சோதியைக் காண்கின்றன.

காண்டலும் அந்தச் சோதியானது வளரத் தொடங்குகின்றது. ஆன்மாவின் உள்ளும் புறத்தும் அது வளர்ந்து நிற்கின்றது. அச்சோதியின் நடுவே ஆன்மா முற்றிலும் உணர்ந்த நிலையில் பேரின்பத்தில் திளைத்து நிற்கின்றது.

திருமூலர் பெருமான் இத்தகைய சோதியைத் தம்முள் அனுபவிக்கின்றார்.

இச்சோதியானது உயிரைத் தன்னுள் அடக்கிக் கொண்டு மேலோங்கிச் சுடர்விட்டு எரிவதைக் காணுகின்றார். ஞானத்தின் சிகரத்தை எட்டுகின்றார்.

''பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்
பரஞ்சோதி என்னுள் படிந்ததற் பின்னைப்
பரஞ்சோதி யுள்நான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே''

மாணிக்க வாசகப் பெருமான் இத்தகைய அனுபவத்தைப் பெறுகின்றார். ''கோயிற் திருப்பதிகம்'' பாடலில் தன்னுடைய புலன்களுடைய ஆட்சி முடிவடைந்த பொழுது அவருடைய உள்ளத்திலே எழும் பரஞ்சோதியைக் காணச் சிவப் பரம்பொருள் வந்தருள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றார்.

''மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காண வந்து அருளாய்''

திருமூலர் பெருமான் இந்த அனுபவத்திற்கொரு சிறப்பான பெயரைத் தருகின்றார். இதை 'அகத்தியம்' என்று கூறுகின்றார்.

அவர் அகத்தியரைக் காணாவிட்டாலும் ''அகத்தியம்'' என்கிற நெறியைத் தன்னுள் கடைப்பிடிக்க அவருடைய தென்னாட்டு அனுபவங்கள் துணைபுரிகின்றன.

உலகத்திலே கேடு விளையும் பொழுது உலகத்தின் நிலை தடுமாறும் பொழுது சிவப் பரம்பொருளின் ஆணைப்படி ''நடுவுள அங்கி'' என்கிற ஆற்றலே உலகத்தைக் காக்கின்றது.

எனவேதான் சிவபெருமான் அகத்தியனை ''அங்கி உதயம் வளர்க்கும் அகத்திய'' என்கின்றார். (அகத்தியம்)

வேள்விகளை மேற்கொண்டு புறத்தே தீயை வளர்க்கும் முறை ஒன்று. அது இம்மைக்கும் மறுமைக்கும் நலனைத் தரும்.

ஆனால் முடிவான பேறான வீட்டுப் பேற்றினைப் பெற உதவாது. உள்ளத்துள்ளே அடங்கிக் கிடக்கும் சிவசோதியைக் கண்டு அதைப் பேணுவதன் மூலமாகத்தான் முடிவான பேற்றினை அடைந்திட முடியும்.

அங்கி வளர்த்தலுக்கும், ஓம்புதலுக்கும் இந்த ஒரு வேற்றுமை உண்டு.

இதனைப் புறத்தே வளர்த்தலும், அகத்தே ஓம்புதலும் என்று சான்றோர்கள் தெளிவுபடுத்துகின்றார்கள்.

திருஞானசம்பந்தர் பெருமான் தில்லையிலே ''கற்றாங்கு எரிஓம்பி கலியை வாராமே, செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம்'' என்று பாடுகின்றார்.

தில்லைவாழ் அந்தணர்களுடைய ஆன்ம வளர்ச்சியைப் பற்றி அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

எனவே திருமூலர் பெருமானுடைய முற்றுணர்ந்த நிலை தன்னுள்ளே அங்கியை ஓம்பிய நிலை ஆகும்.

இதையே திருமூலர் பெருமான் ''அங்கியோகம்'' என்றும் குறிப்பிடுவார்.

அங்கி யோக நிலையில் நிற்கும் அருளாளர்கள், புறத்தே இறைவனுடைய அருளின் வெளிப்பாட்டினைப் பலவகைகளிலே பார்க்கின்றார்கள்.

அகத்தே அருளில் முதிர்ந்த ஞானம் அவர்களுடைய உள்ளத்தில் நிரம்பும் பொழுது அங்கே அன்பும் கருணையும் தோன்றி அவர்களைத் துன்பத்தில் இருக்கும் சீவராசிகளுக்கு எல்லாம் துணை நின்று அவர்களுடைய துன்பத்தைக் களையும் திருத் தொண்டர்கள் ஆக்குகின்றது.

இந்த நிலையில் தான் சீவராசிகள் உய்ய வேண்டி திருமூலர் பெருமான் திருமந்திரத்தை அருளத் தொடங்குகின்றார்.

இத்தகைய திருமந்திரச் சிறப்புகள் சிலவற்றை அடுத்த இதழில் மேலும் கண்டு அறிந்து மகிழ்வு அடைந்திடுவோம்.

(தொடரும்)

★★★

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே

- திருமூலர்

ஆன்மீகம்

திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

1. சுப்பிரமணியர் உலகத்தையெல்லாம் சுற்றிவருவதற்குள் கணபதி தம் தாய்தந்தையராகிய பரமேஸ்வரனையும் பார்வதியையும் சுற்றிவந்து மாங்கனியைப் பரிசாகப் பெற்றார். அதுபோல் ஒன்றும் தெரியாமல் இருந்தாலும் ஒன்றைமட்டும் (இறைவனை மட்டும்) நினைத்துக் கொண்டே இருந்தால் முக்திப்பேறு கிடைத்துவிடும்.

2. பிரதோஷ வழிபாடு ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்பட்டால் சந்தோஷத்தை மட்டுமல்ல சன்மானத்தையும் பெற்றுத் தரும் என்று சொல்லப்படுகிறது. இதில் எதிர்பார்ப்பைவிட ஈடுபாடுதான் அவசியம் என்பதை அறிய வேண்டும்.

3. பொருளை எதிர்பார்த்து செய்யும் வழிபாடு (காமிய வழிபாடு), அருள் (முக்தி) மட்டுமே எதிர்பார்த்துச் செய்யும் வழிபாடு (நிஷ்காமிய வழிபாடு) ஆகியவைகளின்தரம் வேறுபட்டிருந்தாலும் இரண்டிற்கும் அதற்குரிய தகுதியிருந்தால் தான் அதற்குரிய பலனை இறைவன் அளித்திடுவார்.

4. தகுதியுள்ளவர்கள் ஆன்மீகத்தை வலியுறுத்திச் சொல்லலாம். வலியச்சென்று சொன்னால் நகைப்புக்குள்ளாவார்கள். ஆன்மீகத்தில் முதிர்ச்சி அடைந்தவர்கள் (ஞானிகள்) எங்கும் செல்லமாட்டார்கள். நாட்டமுள்ளவர்கள் அவர்களைத் தேடி வருவார்கள்.

5. இசையால் வழிபட்டால் இறைவனை எளிதில் வசப்படுத்தி விடலாம் என்று சொன்னால் இசைக்கு மயங்கி இறைவன் வசப்பட்டு விடுகிறான் என்பது மட்டுமல்லல, இசையுடன் வழிபடுபவர்கள் மனம் ஒருமுகப்படுத்தப்படுவதால் அவர்கள் வழிபாடு உண்மைத் தன்மையைப் பெற்றுவிடுகிறது.

6. மனிதன் பிறவி ஒழிவதற்கான பக்குவத்தைப் பெற முடியா விட்டாலும், நற்செயல்களைச் செய்யவில்லை யென்றால் பிறவிதோறும் பூஜ்யத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஆகையால் ஏதாவதொரு பிறவியில் சரியான அஸ்திவாரம் போட்டுச் சென்றால்தான் பின்வரும் பிறவிகளில் கட்டிடத்தைக் கட்டி முடித்து பிறவியை ஒழிக்க முடியும்.



7. கூட்டுப் பிரார்த்தனையினால் பொது நன்மைகள் ஏற்பட சில சமயங்களில் வாய்ப்புண்டு. தனிப்பட்ட ஆன்ம வளர்ச்சிக்கான வாய்ப்பு மிகவும் குறைவே. ஆகையால் ஆத்மசாதகன் தனித்து முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

8. இறையன்பர்கள் இறையின்பம் பெறுவதற்கான நிந்தாஸ் துதியில் (இகழ்வதுபோல் புகழ்வது) ஈடுபடுவார்கள். இறைவன்மேல் தனக்கு உரிமையிருப்பதாக நினைத்துக்கொண்டு பிதற்ற மாட்டார்கள்.

9. அருளாளர்கள் வினையிலிருந்து விடுபட்டு பிறவிப் பிணி நீங்க இறைவன் உதவியைத் தான் நாடியிருக்கிறார்கள். அதுபோல் நாமும் நாடினால் முக்தியென்ற தேர்வுக்கான படிப்பைச் சொல்லிக் கொடுப்பார். தேர்வில் வெற்றிபெறுவது நம்முடைய முயற்சியைப் பொறுத்தது. கடவுளே வந்து நமக்காகத் தேர்வு எழுத வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. தான் சாப்பிட்டால் தான் தன்னுடைய பசி தீரும் என்பதுதான் நியதி.

10. சந்தன மரத்தையும் கற்பக விருட்சத்தையும் விறகாகப் பயன்படுத்துபவனைப் பற்றி என்ன நினைப்போமோ அதைப் போல் பகுத்தறிவு இருந்தும் பகவத் சிந்தனையில் ஈடுபடாத மனிதனும் கருதப்படுவான். பகவத் சிந்தனையே மெய்யறிவு.

(தொடரும்)

★★★

திருஞான சம்பந்தர் அருளிய மூன்றாம் திருமுறை

முனைவர் த. அமிர்தலிங்கம்

திருஞானசம்பந்தர் அருளியுள்ள தேவாரத் திருமுறைகள் யாவும் அமிர்தம் என்பது ஆன்றோர்கள் கருத்தாகும்.

தெய்வச் சேக்கிழார் தாம் பாடியருளியுள்ள பெரிய புராணத்தில்

''மன்னு வார் சடையாரை முன்தொழுது ''மட்டிட்ட''
என்னும் நல் பதிகத்தினில் ''போதியோ'' என்னும்
அன்ன மெய்த் திருவாக்கு எனும் அமுதம்''

என்று திருஞானசம்பந்தர் மயிலையில் அருளிச் செய்த பூம்பாவையை உயிர்மீட்டுத் தந்த அற்புதத் திருப்பதிகத்தை ''அமுதத் திருப்பதிகம்'' எனப் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

''வாக்கிற்கு அருணகிரி'' என வையம் கொண்டாடும் அருணகிரிநாத சுவாமிகளும்

''புகலியில் வித் தகர் போல
அமிர்தகவித் தொடை பாட
அடிமைதனக் கருள்வாயே''

எனப் பாடியிருத்தல் கொண்டு நம் திருஞானசம்பந்தர் அருள்பதிகம் ஒவ்வொன்றும் அமிர்தகவிகளே என்பதை நன்கு அறிகின்றோம்.

நம் அருணகிரிநாதர் திருஞானசம்பந்தர் பெருமானை முருகப்பெருமானாகவே கொண்டு பற்பல திருப்புகழ்களில் போற்றிப் பாடியிருத்தல் கொண்டும் திருஞான சம்பந்தர் அருளிய அருட்பதிகங்கள் யாவும் அமுதப் பதிகங்களே என உய்த்து நாம் உணர்ந்து இன்புறலாம்.

''கூடலில் அன்று ஞானத்தமிழ் நூல்கள் பகர்ந்து
சேனைச் சமணோர் கழுவின் கண் மிசையேறத்
தீரத்திரு நீறு புரிந்து மீனக் கொடி யோன் உடல் துன்று
தீமைப்பிணி தீர உவந்த குருநாதா!''

என்று அருணகிரிநாதர், சீர்காழித் திருப்புகழில், காழி வேந்தராய் வந்துதித்த திருஞானசம்பந்தர் திருமுருகப் பெருமானே எனப் பாடியுள்ள அருமையும் பெருமையும் எண்ணி எண்ணி மகிழ்தற்குரிய ஒன்றாகும்.

இவ்வாறு முத்தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமானே என்று வையம் கொண்டாடும் முத்தமிழ் விரகர் நம் திருஞானசம்பந்தர் அருளிய முதல், இரண்டாம் திருமுறைகளைப் பற்றி முன் இதழ்களில் விரிவாகக் கண்டோம். இனி திருஞான சம்பந்தர் அருளியுள்ள மூன்றாம் திருமுறைக்கண் அமைத்து விளங்கும் தேவாரத் திருப்பதிகங்கள் பற்றிய சிறப்புக்களையும் விரிவாகக் கண்டு மகிழலாம்.

தமிழ் ஞானசம்பந்தராம் நம் திருஞானசம்பந்தர் அருளியுள்ள மூன்றாம் திருமுறையில் காந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி ஆகிய ஒன்பது பணகளுக்கு உரிய 125 திருப்பதிகங்கள் அமைந்து விளங்குகின்றன.

மூன்றாம் திருமுறையில் முதற்பதிகமாய்த் திகழ்வது ''காந்தாரபஞ்சமம்'' பண்ணில் அமைந்த ''ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம் பலம்'' எனத் தொடங்கும் சிதம்பரத் திருத்தலப் பதிகம் ஆகும்.

தில்லை வாழ் அந்தணர்கள் யாவரும் சிவகண நாதராய் திருஞானசம்பந்தருக்குக் காட்சியளிக்க அதனைத் தம்முடன் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டி அதனைப் பதிகத்துள்ளும் மூன்றாம் பாடலின் கண்

''நீலத்தார் கரிய மிடற்றார் நல்ல
நெற்றி மேலுற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம்''

என்று தில்லை வாழ் அந்தணர்கள் சிவகணநாதரே எனத் திருஞானசம்பந்தர் தெளிவுறுத்துவது இவ்வற்புதப் பதிகத்தின் சிறப்பாகத் திகழ்கின்றது.

தெய்வச் சேக்கிழாரும் இப்பதிகச் சிறப்பினை

''ஆடினாய் நறுநெய்யொடு
பால்தயிர்'' என்று எடுத்து ஆர்வத்தால்
பாடினார் பின்னும் அப்பதி
கத்தினில் பரவிய பாட்டு ஒன்றில்



நீடுவாழ் தில்லை நான்மறை
யோர்தமைக் கண்டஅந் நிலை எல்லாம்
கூடும் ஆறு கோத்து ''அவர் தொழுது
ஏத்து சிற்றம்பலம்'' எனக் கூறி''
''இன்ன தன்மையில் இன்இசைப்
பதிகமும் திருக்கடைக் காப்பு ஏத்தி
மன்னும் ஆனந்த வெள்ளத்தில்
திளைத்து எதிர்வந்து முன் நின்றாடும்
பின்னு வார்சடைக் கூத்தர்பேர்
அருள்பெறப் பிரியாத விடைபெற்றுப்
பொன்னின் அம்பலம் சூழ்ந்து தாழ்ந்து
எழுந்து போந்து அணைந்தனர்''
(திருஞானசம்பந்தர் புராணம் 174-175)

எனத் திருப்பதிகச் சிறப்பையும், பொன்னம்பலச் சிறப்பையும் ஒருங்கு போற்றிப் புகழ்ந்திருத்தல் காண்கின்றோம்.

''அண்டத்து இறைவர் அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டுஅப் பரிசுபெறும் பாணர்க்கும் காட்டினார்''
(திருஞானசம்பந்தர் புராணம் 170)

எனவும் தெய்வச் சேக்கிழார் பாடியுள்ளமை கொண்டு தில்லை தரிசனமே கயிலை தரிசனமாய், தில்லை அந்தணர் தரிசனமே கணநாதர் தரிசனமாய், மண்ணில் பிறந்தார் பெறும் பயன் ஆவதை நாம் உணர்ந்து, தில்லையை வழிபட்டு உய்வடையலாம்.

திருஞானசம்பந்தர் தாமும் இப்பதிகப்பலன் கூறும் போது இப்பதிகம் பாட நாமும் சிவகணநாதராய் உய்யலாம் என்பதை,

''நாறுபூம் பொழில் நண்ணிய காழியுள்
நானமறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும் இன் தமிழால் உயர்ந்தார் உறை தில்லைதன்னுள்
ஏறுதொல் புகழ் ஏந்து சிற்றம்பலத்
தீசனை இசையாற் சொன்ன பத்திவை
கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே''

எனத் தெளிபடுத்தியிருத்தல் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர் இதே காந்தார பஞ்சமம் பண்ணில் பாடியுள்ள திருவாவடுதுறை திருப்பதிகம் பாடும் மெய்யடியார்களுக்குப் பெரும் பொருள் நல்க வல்ல அற்புதத் திருப்பதிகம் ஆகும். வறுமை நீங்கவும், வளமை ஓங்கவும், உற்ற பெருஞ்செல்வம் என்றென்றும்

நீங்கா நலம் நிலைக்கவும் திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக் கண் பாடிய அவ்வற்புதப் பதிகத்தை நாமும் பாடினால் நாடும் பொருள் யாவும் நமைத்தேடி வரும் என்பது திண்ணம் ஆகும்.

திருஞானசம்பந்தரை நமக்கு அருளிய தவம் சான்ற அவர்தம் தந்தையார் உலக நலன் வேண்டி சிவ வேள்வி செய்ய விழைந்தார். ஆனால் அவ்வேள்வி செய்வதற்கு வேண்டிய பொருள் அவரிடம் இல்லை. தம் குறையைத் தவபுதல்வரிடம் கூறாமல் வேறு யாரிடம் கூறுவார் சிவபாத இருதயர்?

..... வேள்வி செய்வதனுக்கு
ஆவது ஆகிய காலம் வந்து அணைவுற அணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையர் தாமும்
போவதற்கு அருள்பொருள்பெற எதிர்நின்று புகன்றார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 422)

''செல்வன் கழல் ஏத்தும்
செல்வமே செல்வம்''

என்பதை உணர்த்த அவதாரம் செய்து உலகுய்யவந்த நம் திருஞானசம்பந்தர் தந்தைக்கு உபதேசம் செய்யும் ''தகப்பன் சாமி''யாக

''அந்தம் இல்பொருள் ஆவன ஆவடுதுறைஉள்
எந்தையார் அடித்தல்ங்கள் அன்றோ''

என எடுத்து மொழிகின்றார்.

தம் தந்தையார் தம் பொருட்டு அன்றி உலக நலன் பொருட்டே வேள்வி புரிதல் வேண்டிப் பொருள் விழைகின்றார் ஆதலால் ஆவடுதுறை அரனாரிடமே பொருள் வேண்டிப் பாடுவோம் என எண்ணி அற்புதத் திருப்பதிகம் பாடுகின்றார் நம் ஆளுடைய பிள்ளையார்.

''சென்று தேவர்தம்'' பிரான் மகிழ் கோயில் முன்பு எய்தி
நின்று போற்றுவார் ''நீள்நிதி வேண்டினார்க்கு ஈவது
ஒன்றும் மற்றுஇலேன் உன் அடி அல்லது ஒன்று அறியேன்''
என்று பேர் அருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 424)

''எடுத்த வண்தமிழ்ப் பதிகம் நாலடியின் மேல் இருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்த இன் இசையினால்
துதிப்பார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 425)

திருஞானசம்பந்தர் இப்பதிகம் பாடியதும் பூதகணம் ஒன்று சிவபெருமான் திருவருளால் தோன்றி ஆயிரம் பொன் அடங்கிய பொற்கிழியை பலிபீடத்தின் மேல் வைத்து ''எடுக்க எடுக்கக் குறையாது இப்பொற்கிழி! ஏற்றருளும்'' எனத்திருவாய் மலர்ந்து மறைகின்றது.

''நச்சிஇன் தமிழ் பாடிய ஞானசம்பந்தர்
இச்சையே புரிந்து அருளிய இறைவரின் அருளால்
அச்சிறப்பு அருள் பூதம் முன் விரைந்து அகல்பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரக்கிழி ஒன்று''.

(திருஞானசம்பந்தர் புராணம் 426)

''வைத்த பூதம் அங்கு அணைந்துமுன் நின்று நல்வாக்கால்
''உய்த்த இக்கிழி பொன் உலவாக்கிழி, உமக்கு
நித்தனார் அருள் செய்தது'' என்று உரைக்க நேர்தொழுதே
அத்தனார் திருஅருள் நினைந்து அவனிமேல் பணிந்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 427)

திருஞானசம்பந்தர் பெற்றது போல் நாமும் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போன்ற உலவாக்கிழி பெற திருஞானசம்பந்தரின் அமுதவாக்காய் அமைந்த இவ்வற்புதப் பதிகத்தைப் பாடிப் பரவிடுவோம் ஆக!

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவதுதுறை அரனே 2

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல் எரி அனல்புல்கு கையவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 3

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியால் அரற்றாது என்நா
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 4

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியல்லால் சிந்தை செய்யேன்

* * *

வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில் நடைபெற்ற சுதந்திரதினம் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழாவில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திருமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இணை ஆணையாளர் (தலைமை இடம்) திருமிகு த. சுந்தரம் பி.ஏ.பி.எல். அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன் அடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 6

வெப்பொடு விரவிஓர் வினைவரினும்
அப்பா உன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவுஅழிய
அப்படி அழல்எழ விழித்தவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல் அலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நா
கண்ணனுங் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரிது ஆயவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே 9

பித்தொடு மயங்கிஓர் பிணிவரினும்
அத்தா உன் அடியலால் அரற்றாது என்நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே!
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே! 10

அலைபுனல் ஆவடு துறை அமர்ந்த
இலை நுனி வேற்படை எம்இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலை வல்லார்
வினையாயின் நீங்கிப் போய் விண்ணவர் வியன் உலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே 11

திருச்சிற்றம்பலம்

''கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும்'' என நாவுக்கரசரும் போற்றியுள்ள இவ்விலையுடை அருந்தமிழை - ஒப்பிலா பொற்றமிழைப் போற்றி நாமும் நற்பொருள் பெறுவோம் ஆக!

(தொடரும்)

★★★

குருவருள் நல்கும் திருஆலங்குடி திருத்தலம்

- கோ. சிவஞானம்

தலமும் இருப்பிடமும்

வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டிலே தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு வடக்கே 7 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்தி லிருந்து தெற்கே 17 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத் திலிருந்து மன்னார்குடி (நீடாமங்கலம் வழி) பஸ் மார்க்கத்தில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. சோழ நாட்டில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற 274 தலங் களில், காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங் களில் 98-ஆவது தலமாக விளங்கிவரும் தலமாகும்.

தலப்பெயர்கள்

காசி ஆரண்யம் - திருஇரும்பூளை - ஆலங்குடி என்ற பெயர்களால் வழங்கப்பெறுவது; திருஞான சம்பந்தப் பெருந்தகையால் ''எழிலார் இரும்பூளை'' என அருளப்பெற்றது. பாற்கடல் கடைந்தபோது உண்டான ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி அபயம் புகுத்த தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் தோழனாகிய சுந்தர மூர்த்தியைக் கொண்டு விஷத்தைக் கொண்டுவரச் செய்து குடித்துக் கண்டத்து அடக்கியமையினால் அப்பெயர் பெற்றது. இதை விளக்கும் காளமேகப் புலவர் பாடலும் இருக் கிறது. அது

''ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான் என்று ஆர்சொன்னார் - ஆலம்
குடியானே யாகில் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதினில்''

இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை.

கோயிலமைப்பு

கோயில், ஊரின் மத்தியிலே நான்கு புறமும் தாமரை பூத்த அகழியாலும் உயரமான மதில்களாலும் சூழப்பெற்று மிகவும் அழகான தோற்றத்துடன் கூடிய ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் காட்சியளிக்கிறது. தென்புறம் அமைந்த இந்தக் கோபுரத்தில் பழைமையான சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன. கோபுர வாயிலுள்ளே பிரவேசித்ததும் மேலக் குடவறையில் கலங்காமல் காத்த விநாயகர்சந்நிதி அமைந்துள்ளது. அவரைவணங்கி உள்ளே நுழைந்தால் முதல் பிராகாரம் காணப்படு கின்றது. எதிரே அம்மையாரின் தெற்கு நோக்கிய சந்நிதி காணப்படுகின்றது. கொஞ்சம் உள்போய் மேற்கு நோக்கித் திரும்பி இரண்டாவது வாயிலைக் கடந்ததும் உள்ளே தென்புறம் உள்ள கீழ்த் திருமாளப் பத்தியில் சூரியர் சந்நிதி இருக்கிறது. தென்புறம் உற்சவ சுந்தர மூர்த்தி சுவாமிகள் அழகிய திருக்கோலத்துடன் அருள் பாலிக்கிறார். அடுத்தாற்போல் தெற்குத் திருமாளப் பத்தியில் (உள் பிராகாரத்தில்) நால்வர் திருவுருவமும், சூரியேசர் சோமேசர், குருமோக்ஷேசுரர், சோமநாதர், சப்தரிஷி நாதர், விஷ்ணு நாதர், பிரம்மேசர் ஆகிய சப்த லிங்கங்களோடு காசி விசுவநாதர், விசாலாக்ஷி, அகத்தியரும் உள்ளனர். மேலத் திருமாளப்பத்தியில், ஆக்ஞா கணபதி, சோமாஸ்கந்தர், பெரும் திருவுருவத்து டன் கூடிய கலங்காமல் காத்த விநாயகர், நின்ற கணபதி, சந்திரசேகரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, பக்த சண்டேசுவரர், கல்யாண சாஸ்தா, ஸப்தமாதா முதலிய உற்சவர்களும், அடுத்து முருகன், இலக்குமி இருப்பிடமும், வடக்குத் திருமாளப் பத்தியில் நவக்கிர ஹம், சபாபதி, சிவகாமி அம்மை, சம்பந்தர், அப்பர், மணிவாசகர் முதலியோரும் காட்சி தருகிறார்கள். சபா நாதர் சந்நிதியில் திருமுறைக்கோயிலும் அமைந்துள்ளது. அடுத்து உத்ஸவ தட்சிணாமூர்த்தி, சனகாதி நால்வருடன் காட்சி தருகிறார். கீழ் திருமாளப்பத்தி வடபுறம் பைரவர், சந்திரன் சந்நிதியும் உள்ளது. சுவாமி மகா மண்டபத்தில் நந்தி, பலிபீடம் (செப்புத் திருமேனியுடன்) உள்ளது. மகா மண்டப வாயிலில் துவார பாலகரும் கருவறையில் கிழக்கு நோக்கி ஆபத்சகாயரும், அர்த்த மண்டபத்தில் பள்ளியறை சொக்கரும், போகசக்தி அம்மையும் உள்ள னர். தெற்கு கோஷ்டத்தில் கணபதியும், அடுத்து இத்த லத்து சிறப்பு மூர்த்தியாகிய குரு தட்சிணாமூர்த்தி இருப்பிடமும், மேலக் கோஷ்டத்தில் லிங்கேசுரரும் அடுத்து 'ஞானகூபம்' என்னும் தீர்த்தக் கிணறும் உள்ளன. வெளியே சுக்கிரவார அம்மன் சந்நிதியும் பள்ளியறையும் உள்ளன. தெற்கு நோக்கி அம்மன் சந்நிதி தனியான பிரகாரத்துடன் உள்ளது. துவார சக்தி, செப்பு நந்தி பலி பீடமும், கீழ்ப்புறம் திருமாலைக் கட்டி மண்டபமும், மேற்கு நோக்கி சனீச்சுரர் சந்நிதியும், த்வஜ கணபதி கொடி மரம், நந்தி பலிபீடமும், வடபுறம் வசந்த மண்ட மும், கீழ்ப்புறம் யாக சாலையும், பாகசாலையும், கீழ்த்திருவாயிலும் அடுத்து தென்புறம் வடக்கு பார்த்து சப்தமாதா ஆலயமும், வடபுறம் திரு நந்தவனமும் உள்ளது.

மூர்த்திகள்

இறைவன் பெயர்கள் - காசி ஆரண்யேசுரர், ஆபத்சகாயர்
இறைவி பெயர்கள் - ஸ்ரீ உமையம்மை, ஏலவார் குழலியம்மை
விசேட மூர்த்தி - ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி
விசேட தலம் - ஸ்ரீ குருமூர்த்தி பரிகார ஸ்தலம்.

தீர்த்தங்கள்

1. பிரம்ம தீர்த்தம் - தெற்கு சந்நிதியில் உள்ளது. அதில் தீர்த்த உத்ஸவ மண்டப அடித்தளம் மட்டும் காணப் படுகிறது.
2. இலக்குமி தீர்த்தம் - மேல வீதிக்கு மேல்புறம் உள்ளது. அது ஆயக்குளம் என வழங்குகிறது.
3. இந்திர தீர்த்தம் - கீழ வீதிக்கு கீழ்ப்புறம் உள்ளது செட்டித்தோப்பு குளம் என வழங்குகிறது.
4. அக்னி தீர்த்தம் - அருகில் உள்ள கிராமமாகிய பூனாயிருப்பில் உள்ளது.
5. யம தீர்த்தம் - அருகில் உள்ள நரிக்குடி என்ற கிராமத்தில் உள்ளது.
6. நிருதி தீர்த்தம் - அருகில் உள்ள புலவநத்தம் கிராமத்தில் உள்ளது.
7. வருண தீர்த்தம் - அருகில் உள்ள பூந்தோட்டம் கிராமத்தில் உள்ளது.
8. வாயு தீர்த்தம் - அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் உள்ளது.
9. குபேர தீர்த்தம் - அருகில் உள்ள கீழ அமராவதி கிராமத்தில் உள்ளது.
10. ஈசான தீர்த்தம் - அருகில் உள்ள சித்தன்வாழூர் கிராமத்தில் உள்ளது.
11. சூரிய தீர்த்தமும், 12. சந்திர தீர்த்தமும் - கீழ்த் திசையில் உள்ளன. இரண்டு தீர்த்தங்களும் இருக்கும் இடங்கள் சூரியேசுரம் என்றும் சோமேசுரம் என்றும் வழங்கப்படுகின்றன.
13. அமுதபுட்கரணி - ஆலயத்தைச் சுற்றி அகழியாக உள்ளது.
14. ஞானகூபம் கிணறு - சுவாமி மகா மண்டபத்தில் திரு மஞ்சனக் கேணியாக உள்ளது.
15. பூளைவள ஆறு - கிழக்கில் உள்ளது, துலா மாதத்தில் இதன் தீர்த்தத்தைக் கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்து வருகிறார்கள்.

தலப்பெருமை

இந்தத் தலம் காவிரி நதியின் தென் கரையில் ஒரு காத தொலைவில் உள்ளது. சீரும் சிறப்பும் பெற்றது. தேவர்கள் அமுதம் கடைந்தபோது ஏற்பட்ட விஷத்தினால் அவதியுற்ற ஆண்டவனை வழிபட, ஆலமாகிய விஷத்தைக் குடித்துக் காத்தமையால், இவ்வூருக்கு ஆலங்குடி எனவும், இறைவனுக்கு 'ஆபத்சகாயர்' எனவும் பெயர் வழங்கப்படுகின்றது. இந்த ஊரில் அரவு தீண்டி மரித்தவர் இல்லை. கஜமுகாசுரனால் தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்கு 'கலங்காமல் காத்த விநாயகர்' எனப் பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனைத் திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமண மங்கலம் எனப் பெயர் வழங்கப் பெறுகிறது. மத்தியார்ச்சுன மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரத் தலமாக உள்ளது. திரு இடை மருதூருக்குப் பரிவாரத் தலங்களாவன : 1. திருவலஞ்சுழி (விநாயகர்) 2. திருவேரகம் (முருகன்) 3. திருவாவடுதுறை (நந்தி) 4. சூரியனார் கோயில் (நவக்கிரகம்) 5. திருவாப்பாடி (சண்டேசுரர்) 6. சிதம்பரம் (நடராஜர்) 7. சீர்காழி (பைரவர்) 8. திருவாரூர் (சோமாஸ் கந்தர் - தியாகேசன்) 9. ஆலங்குடி (தட்சிணாமூர்த்தி). பஞ்சவாரண்ய தலங்களாகிய 1. திருக்கருகாவூர் 2. திரு அவளிவ நல்லூர் 3. திரு அரந்தைப்பெரும்பாழி 4. திரு இரும்பூளை என்கிற ஆலங்குடி 5. திருக்கொள்ளம் புதூர் - இவைகளில் நான்காவது தலமாக உள்ளது விசுவாமித்திரர் பூஜித்த தலம். அம்மையின் திருமணத்திற்கு வந்த திருமால், பிரம்மா, இலக்குமி, கருடன், அஷ்டதிக்கு பாலகர், ஐயனார், வீரபத்திரர் முதலானோர் தம் தம் பெயரால் லிங்கங்கள் நிறுவி பூஜித்து வழிபட்ட தலம். முசுகுந்த சக்ரவர்த்தி, சுவாசனன், சுந்தரர் முதலியோர் வழிபட்ட தலம், திருஞானசம்பந்தரால் பதிகம் பெற்றது. அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் சேர்த்துப் பாடப்பெற்ற சிறப்புடையது. திருஞான சம்பந்தர் தமது பாடல்களால் இத்தல அம்மனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

புராண வரலாறும், வழிபட்டோரும்

சுந்தரர் : பல தலங்களையும் தரிசித்து, இந்தத் தலத்துக்கு வந்து கொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அகத்திய காவிரி என்னும் வெட்டாறு, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த காரணத்தால், கரையில் அடியார்களுடன் மனம் கலங்கி நிற்க, காசியாரண்யேஸ்வரராகிய ஆபத்சகாயர் ஓடக்காரனாக வந்து இக்கரைக்குக் கொண்டு விடுவதாகச் சொல்லி பவுன்கள் பெற்று, முதலில் அடியார்களில் சிலரை இக்கரை கொண்டு வந்து சேர்த்து மீண்டும் சுந்தரரிடம்

போய் அடையாளச் சன்மானம் கேட்டுப் பெற்று அவரை ஏற்றி வருகையில் நடு ஆற்றில் திருவிளையாடலாக சுழல் ஏற்படும்படி செய்து, பற்றுக்கோலை நழுவவிட்டு எடுப்பதைப்போல் பாசாங்கு செய்து தானும் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன் போல் நிற்க, படகில் உள்ள நாயனார் இறைவனை வேண்ட ஓடம் சிறிது தூரம் சென்று பாறையில் மோதி நொறுங்கியது. சிவபெருமான் ரிஷபாருடராகத் தோன்றி யாவரையும் தூக்கிக் காப்பாற்றியதாக வரலாறு வழங்குகிறது. பின்பு சுந்தரர் தலத்துக்கு வந்து முறைப்படி வணங்கி வழிபட்டு தட்சிணாமூர்த்தியைத் தரிசித்து ஞானோபதேசம் பெற்றார். இந்தத் தலத்தில் உள்ள குருமூர்த்தியைக் குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு சிவஞானம் எளிதில் கைகூடும். மீண்டும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார்கள் கூட்டத்துடன் அரவூர் கார்கோடகேஸ்வரரை வழிபட்டு நீடாமங்கலத்திலுள்ள சக்ரவாகப் பட்சியால் பூசிக்கப்பெற்ற கோமுகேஸ்வரரை வழிபட்டார்.

திருவாரூரில் நடைபெறும் விழாவில் அப்பொழுது அரசாண்ட ஈச சோழராஜா எல்லாத் தலங்களிலும் உள்ள சுந்தரமூர்த்தி திருவுருவங்களைக் கொண்டுவந்து விழா நடத்தினான். எல்லா சுந்தர மூர்த்திகளையும்விட ஆலங்குடியில் உள்ள சுந்தரர் திருஉரு அவன் மனதைக் கவர்ந்து விட்டது. அதைத் திருவாரூரிலேயே வைக்க வேண்டுமென்று விரும்பினான். அதை அறிந்த ஆலங்குடி ஆதி சைவசிவாச்சாரியார்கள் குழந்தைக்கு அம்மை போட்டிருப்பது போல் தொட்டில் கட்டி ஆலங்குடி கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்த அம்மைத் தழும்புகளை இன்றும் பெருமாள் மீது காணலாம்.

வழிபட்டோர்கள் : ஆதிசங்கரர் குருமூர்த்தியைத் தரிசித்து சிவஞானம் பெற்றார். இந்திரன் முதலிய அஷ்டதிக்கு பாலர்கள் இறைவனை வழிபட்டுத் தம் பெயரால் தீர்த்தமும் சிவலிங்கமும் நிறுவி பூஜித்து, தங்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் நீங்கிப் பேறு பெற்றார்கள். சுவாசனன் என்ற அரசன் பஞ்சமாபாதகங்களை அஞ்சாமல் செய்து அழிந்து நரகம் அடைந்து துன்புற்றுப் பின், பூலோகத்தில் பைசாசமாக அலையும் போது, முன் நல்வினையால் அகத்தியரைச் சந்தித்து அவரையும் துன்புறுத்த முயலும்போது அவர் உபதேசித்த படி இத்தலத்தை அடைந்து தீர்த்தமாடி வழிபட்டு, இழந்த செல்வத்தையும் பேரரசையும் திரும்பப்பெற்றான்.

பார்வதியார் : கைலாசத்தில் பார்வதி அம்மையார் தோழியர்களோடு பந்தாடியபோது உயரப்போன பந்தை பிடிக்கக் கையை உயரத் தூக்கி பந்தை எதிர்பார்த்து நிற்க, வானவீதியில் சென்ற சூரியன் தன்னை நிற்கச் சொல்வதாகக் கருதித் தேரை நிறுத்த, அவன் தொழில் தடைபட்டு உலகம் அவதியுற்று சிவபெருமானிடம் முறையிட அவர் சாபத்தின் காரணமாகப் பூலோகத்தில் காசியாரண்ய தலத்தில் அவதரித்து தவம் செய்து, இறைவனைத் திருமணம் செய்து கொண்டார்.

முசுகுந்தச் சக்ரவர்த்தி: முசுகுந்தச் சக்ரவர்த்தி தன் மந்திரியும் சிவபக்தருமான அமுதோகர் என்பவருடைய சிவ புண்யத்தில் பாதியேனும் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்க, மந்திரி சம்மதியாமையால் அவர் தலையைக் கொய்யும்படி உத்தரவிட, கொலைஞர் வாளேந்தியவுடன் சிவனாணையால் உயிர் உடனே நீங்கவும், இதன் அடையாளமாக அமுதோகன் என்ற சப்தம் தலம் முழுவதும் குடிகொள்ள, அரசன் வியந்து, அபசாரத்தை நினைத்து வழிபட்டு இத்தலத்து இறைவனை வணங்கிப் பாபம் நீங்கப் பெற்றான்.

சுற்றுக் கோயில்கள்

கீழ்க் கோபுர வாயில் தென்புறம் சப்த மாதாவின் ஆலயமும், ஈசான்ய திக்கில் பாதாள பைரவி காளியம்மன் ஆலயமும், தெற்குக் கோபுர வாயில் கீழ்ப்புறம் மேற்கு நோக்கி கல்யாண சாஸ்தா ஆலயமும், தேர்முட்டிக்கருகில் கிழக்கு நோக்கியுள்ள ஆலயத்தில் கல்யாண வீரபத்ரரும் தட்சன் விநாயகர் சந்நிதியும் உள்ளன.

திருவிழாக்கள்

பஞ்ச பருவ உற்சவம், மாதாந்திர குருவாரந் தோறும் விசேஷ தரிசனமும், குருபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு பிரவேசிக்கும் காலங்களிலும், (குரு பெயர்ச்சி) பிரதி வருஷ மாசி குருவாரத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனையும் நடைபெறுகிறது. சித்திரைப் பவுர்ணமியைக் கொண்டு பத்து நாள் விழாவும் தட்சிணாமூர்த்திக்குத் தேர்விழாவும் கொண்டாடப்படுகின்றது. தைப்பூசம், பங்குனி உத்திரத்தில் தீர்த்தவாரியும் நடைபெறுகிறது.

நவ நாயகர்களின் பெருமை

சூரியன்

காசிப முனிவரின் புத்திரர், ஒளிப் பிழம்பானவர், நவக்கிரகங்களில் முதன்மை பெற்றவர்.

ராசி	-	சிம்மராசிக்கதிபதி
திக்கு	-	நவக்கிரகங்களுக்கு நடு
அதிதேவதை	-	அக்னி

பிரத்யதிதேவதை	-	உருத்திரன்
தலம்	-	சூரியனார் கோயில்
நிறம்	-	சிவப்பு
வாகனம்	-	ஏழு குதிரைகள் பூட்டிய ரதம்
தானியம்	-	கோதுமை
மலர்	-	செந்தாமரை, எருக்கு
வஸ்திரம்	-	சிவப்புக்கரை ஆடை
ரத்தினம்	-	மாணிக்கம்
அன்னம்	-	கோதுமை, ரவா, சர்க்கரைப் பொங்கல்

சந்திரன்

பாற்கடலில் தோன்றியவர், தண்ணொளியுடையவர். வளர்பிறையில் சுபராகவும், தேய்பிறையில் பாபராகவும் விளங்குபவர்.

ராசி	-	கடக ராசிக்கு அதிபதி
திக்கு	-	தென் கிழக்கு
அதிதேவதை	-	நீர்
பிரத்யதிதேவதை	-	கௌரி
தலம்	-	திருப்பதி
நிறம்	-	வெள்ளை
வாகனம்	-	வெள்ளைக் குதிரை
தானியம்	-	நெல் (பச்சரிசி)
மலர்	-	வெள்ளை அரளி, வெள்ளல்லி
வஸ்திரம்	-	வெள்ளையாடை
ரத்தினம்	-	முத்து
அன்னம்	-	தயிர் அன்னம்

செவ்வாய்

அங்காரகன் : இவர் வீரபத்திரர் அம்சம். தெய்வம் சுப்ரமணியர். பாவபலனைக் கொடுக்கும் குரூரர்.

ராசி	-	மேஷம் விருச்சிகராசிக்கதிபதி
திக்கு	-	தெற்கு
அதிதேவதை	-	நிலமகள்
பிரத்யதிதேவதை	-	க்ஷேத்திரபாலகன்
தலம்	-	வைத்தீஸ்வரன் கோயில்
நிறம்	-	சிவப்பு
வாகனம்	-	ஆட்டுக்கிடா
தானியம்	-	துவரை
மலர்	-	சண்பகம், சிவப்பு அரளி
வஸ்திரம்	-	சிவப்பு ஆடை
ரத்தினம்	-	பவழம்
அன்னம்	-	துவரம் பருப்புப்பொடி சாதம் (காரம்)

புதன்

இவர் சந்திரனுடைய குமாரர். தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அழிக்கும் ஆற்றல் உடையவர்.

ராசி	-	மிதுனம் கன்னி ராசிக்கு அதிபதி
திக்கு	-	வடகிழக்கு
அதிதேவதை	-	விஷ்ணு
பிரத்யதிதேவதை	-	நாராயணன்
தலம்	-	மதுரை
நிறம்	-	வெளிர்பச்சை
வாகனம்	-	குதிரை
தானியம்	-	பச்சைப்பயறு
மலர்	-	வெண்காந்தள்
வஸ்திரம்	-	பசுமையாடை
ரத்தினம்	-	மரகதம்
அன்னம்	-	பாசிப் பருப்புப் பொடி சாதம் (காரம்)

குரு

இவர் தேவகுரு. இவருடைய பார்வையால் தோஷங்கள் அனைத்தும் நீங்கும். பூர்ணசுபர்.

ராசி	-	தனுசு மீனராசிக்கதிபதி
திக்கு	-	வடக்கு
அதிதேவதை	-	பிரம்மன்
பிரத்யதிதேவதை	-	இந்திரன்
தலம்	-	திருச்செந்தூர், ஆலங்குடி
நிறம்	-	மஞ்சள்
வாகனம்	-	மீனம்
தானியம்	-	கடலை
மலர்	-	முல்லை
வஸ்திரம்	-	மஞ்சள் ஆடை
ரத்தினம்	-	புஷ்பராகம்
அன்னம்	-	கடலைப் பொடி சாதம் (காரம்)

சுக்கிரன்

இவர் அசுரகுரு. இவரை மழைக்கோள் என்று அழைப்பர். சுபர்.

ராசி	-	ரிஷபம், துலாம் ராசிக்கதிபதி
திக்கு	-	கிழக்கு
அதிதேவதை	-	இந்திராணி
பிரத்யதி தேவதை	-	இந்திர மருத்துவன்
தலம்	-	ஸ்ரீரங்கம்

நிறம் - வெள்ளை
வாகனம் - முதலை
தானியம் - மொச்சை
மலர் - வெண்தாமரை
வஸ்திரம் - வெள்ளையாடை
ரத்தினம் - வைரம்
அன்னம் - மொச்சைப்பொடி சாதம்

சனி

இவர் சூரியனுடைய குமாரர், பாவபலன்களை தருபவர். ஈஸ்வர பட்டம் பெற்றவர்.

ராசி - மகர, கும்ப ராசிகளுக்கதிபதி
திக்கு - மேற்கு
அதிதேவதை - இயமன்
பிரத்யதிதேவதை - பிரஜாபதி
தலம் - திருநள்ளாறு
நிறம் - கருமை
வாகனம் - காகம்
தானியம் - எள்ளு
மலர் - கருங்குவளை, வன்னி
வஸ்திரம் - கருப்பு நிற ஆடை
ரத்தினம் - நீலம்
அன்னம் - எள்ளுப்பொடி சாதம் (காரம்)
தீபம் - எள்ளு முடிச்சு தீபம்

ராகு

அசுரத் தலையும், நாகவுடலும் உடையவர். மிக்க வீரர் உடையவர். கருநாகம் என்று அழைக்கப்படுபவர்.

திக்கு - தென்மேற்கு
அதிதேவதை - பசு
பிரத்யதிதேவதை - பாம்பு
தலம் - காளத்தி
நிறம் - கருமை
வாகனம் - நீலசிம்மம்
தானியம் - , உளுந்து
மலர் - மந்தாரை
வஸ்திரம் - கருப்புநிற ஆடை
ரத்தினம் - கோமேதகம்
அன்னம் - உளுத்தம் பருப்பு பொடி சாதம் (காரம்)

கேது

இவர் நாகத் தலையும், அசுர உடலும் உடையவர். சிகி என்றும், செந்நாகம் என்றும் அழைக்கப்படுபவர்.

திக்கு - வடமேற்கு
அதிதேவதை - சித்திரகுப்தன்
பிரத்யதி தேவதை - பிரம்மன்
தலம் - கா...
நிறம் - செம்...
வாகனம் - கழுகு
தானியம் - கொள்ளு
மலர் - செவ்வல்லி
வஸ்திரம் - பலநிற ஆடை
ரத்தினம் - வைடூரியம்
அன்னம் - கொள்ளுப்பொடி சாதம்

நவக்கிரகத்தலங்கள்

சூரியன் : சூரியனார் கோயில்
கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் உள்ளது.

சந்திரன் : திங்களூர்
தஞ்சாவூர் - திருவையாறு சாலையில் உள்ளது.

செவ்வாய் : வைத்தீஸ்வரன் கோயில்
மயிலாடுதுறை - சிதம்பரம் சாலையில் உள்ளது.

புதன் : திருவெண்காடு
மயிலாடுதுறை - பூம்புகார் சாலையில் உள்ளது.

குரு : ஆலங்குடி - பரிகாரஸ்தலம்
கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் 17 ஆவது கி.மீட்டரில் உள்ளது.

சுக்கிரன் : கஞ்சனூர்
சூரியனார் கோயிலிருந்து 2ஆவது கி.மீட்டரில் உள்ளது.

சனி : திருநள்ளார்
கும்பகோணம் - காரைக்கால் சாலையில் உள்ளது.

ராகு : திருநாகேஸ்வரம்
கும்பகோணம் - காரைக்கால் சாலையில் உள்ளது.

கேது : பெரும்பள்ளம் (சாயாவனம்)
மயிலாடுதுறை - பூம்புகார் சாலையில் உள்ளது.

குரு வணக்கப்பாடல்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

- பரஞ்சோதி மாமுனிவர்

நவக்கிரகத் துதிப்பாடல்கள்

கவிஞர் குமர விருச்சிகன், நாமக்கல்

கேது

அஸ்வினி, மகம், மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தினமும், மற்றவர்கள் செவ்வாய் கிழமையாவது கேதுவை நவக்கிரக சன்னதியில் தீபமேற்றி வழிபடுதல் முக்கியம்.

பாடல்

புரசு மரப் பூப்போன்ற செந்நிறம் கொண்ட
கேதுவே!
கிரகங்களில் வலிவான உன் தலை சர்ப்பம்
போலவே!
கோப குணம் கோர முகம்
கொண்டே விளங்குவாய்!
ஞானமதும், மோட்சமதும்
எமக்கு வழங்குவாய்!
செவ்வாய்க் கிழமை உகந்த நாளாம்
கேதுவைத் துதி செய்வோம்!
வெல்வோம் புலன்களை - கேதுவினாலே
நற்கதி பெற்றுய்வோம்!
முதல் நட்சத்திரம் அஸ்வினிக் கதிபதி
கேது பகவானே!
முழு முதற்கடவுள் கணபதியைத் தொழ
கேது அருள்வானே!

சூரியன்

சிம்ம ராசிக்காரர்கள், ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர்கள், கிருத்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தினமும் காலையில் சூரியனை வழிபட்டே தீர வேண்டும். மற்றவர்கள், ஞாயிற்றுக் கிழமையாவது அவசியம் சூரியனைப் பார்த்து இப்பாடலைச் சொல்லி / பாடி வழிபட வேண்டும்.

பாடல்

காஸ்யப முனிவருக்குப் பிறந்தவனே!
கதிரவனே!
கரி இருட்டைத் துடைத்தாலும்
கறுப்படையாத் தினகரனே!
விழிகளதைச் சுருக்க வைக்கும்
பிரகாசச் சுடரே!
மழை அளவைப் பெருக்க வைக்கும்
ஆகாசக் கதிரே!
செம்பருத்திப் பூப் போன்ற
செந்நிறத்துப் பகலவனே!
கண் வருத்தி அதிகாலை
வழிபடுவோம் அனைவருமே!
ஆத்ம பலம் தந்தை நலம்
இவ்விரண்டும் பெருகிடுமே!
ஏழு குதிரைகள் ரதமேறி வலம் வரும்
வானத்துப் பெருமானே!
ஆளும் ஆற்றல் பெற்றிடவே
அருள்வாய் ஆதித்ய பகவானே!

இராகு

திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்திரக்காரர்கள் தினமும், மற்றவர்கள் சனிக் கிழமையாவது ராகு பகவானை நவக்கிரக சன்னதியில் தீபமேற்றி வழிபட வேண்டும்.

பாடல்

சிம்ஹிஹை கர்ப்பத்தில் உதித்தவரே!
மும் மூர்த்திகளைத் துதித்தவரே!
அடுத்துக் கெடுப்பது மனித இனம்!
கெடுத்துக் கொடுப்பது உனது குணம்!

அசுரத்தலையும் - சர்ப்ப உடலும்
கொண்டே இருப்பவர் இவர்தானே!
கடக சிம்மராசிக்காரரை அதிகம்
படுத்தும் கரியோனே!
ஸ்ரீ பெரும் புதூரில் ராமானுஜரைக் கும்பிட
ராகு தருவானே! - சுகம் தருவானே!

நம்மை விடவும் தாழ்ந்தோரை
மதித்தால் ராகு மகிழ்ந்திடுவார்!
அம்மை துர்க்கையை ராகு காலத்தில்
துதிப்போம் ஞானம் அடைந்திடுவோம்!
ராகு தருபவரே! ஞானம் தருபவரே!

சந்திரன்

கடக ராசிக்காரர்கள் மற்றும் திங்கட்கிழமை பிறந்தவர்கள், ரோகிணி, அஸ்தம், திருவோணம் நட்சத்திரக்காரர்கள் தினமும், மற்றவர்கள் திங்கட் கிழமையாவது சந்திரனை வழிபட வேண்டும். நவக்கிரக சன்னதியில் சந்திர பகவானுக்குத் தீபமேற்றி இப் பாடலைச் சொல்லித் துதிக்கவும்.

பாடல்

தயிர் சங்கு பனி போன்ற
வெள்ளை நிற விண்ணரசே! நீ
ஒளிர் பிறையாய் உள்ள இடம்
எம்பெருமான் சிவன் சிரசே!
உன் பிறப்பிடம் அமுதப் பாற்கடலே!
உன் கொடிச் சின்னமும் ஒரு வெண்முயலே!
மறை நிலாவும்
நிறை நிலாவும்
ஒரு நாள் நிறைவது கண்டு
விரக்தியுற்று வாழும் நாமும்
ஊக்கம் கொள்வது நன்று!
சந்திர பகவானே
மனசின் மந்திரி நீ தானே!
தாயின் நலமும் மனசுத் தெளிவும்
உன்னைத் துதித்தால் கிடைத்திடுமே!
தேயும், வளரும் திங்களை வேதம்
சோமன் என்றே அழைத்திடுமே!

புதன்

மிதுனம், கன்னி ராசிக்காரர்கள், புதன்கிழமை பிறந்தவர்கள், ஆயில்யம், கேட்டை, ரேவதி நட்சத்திரத் தில் பிறந்தவர்கள், மாணவ - மாணவியர்கள் தினமும் - மற்றவர்கள் புதன்கிழமையாவது புதன் பகவானை தீப மேற்றி வழிபட்டே தீரவேண்டும்.

பாடல்

பச்சைவஸ்திரன் படிப்பின் காரகன்
புதன் பகவானே! வரந் தருவாய்!
இச்சகம் மெச்சும் வகையில் எமக்கு
கல்விக் கண்ணைத் திறந்திடுவாய்!
துரத்தும் ஆசை காரணமாய்
ஆடி உடலின் நலம் கெட்டோம்!
மருந்தால் நோய்கள் குணமாக
புதனே உன்னை வழிபட்டோம்!
மூலிகை மருந்தின் காரகரே!
வாழிய மனிதரின் உடல் நலமே!
சூரிய பகவான் சனி பகவான்
ஒருவருக்கொருவர் எதிரிகளாம்!
பாரீர்! இந்த இருவருமே
புதனுக்குச் செய்வார் உதவிகளாம்!
தாமரை அழகைத் தன்னிடம் கொண்டவர்
புதனே! அழகில் மதனே!
வாமனனாக வந்தவர் விஷ்ணு
அவரது அம்சம் புதனே!

செவ்வாய்

மேஷம், விருச்சிக ராசிக்காரர்கள், செவ்வாய்க் கிழமை பிறந்தவர்கள் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரக்காரர்கள் தினமும், மற்றவர்கள் செவ்வாய்க்கிழமையாவது செவ்வாய் பகவானை நவக்கி ரக சன்னதியில் தீபமேற்றி வழிபட வேண்டும்.

பாடல்

செவ்வாய் பகவானே - உன்னைத்
தொழுபவன் பலவானே!
பூமா தேவிக்குப் பிறந்தவனே! துணிவைத் தருகிற
சிறந்தவனே!
மேஷம் விருச்சிகம் இரண்டு ராசிக்கும்
நீதான் உடையவனே!
காசில் உழவர் உன்னைத் துதித்தால்
பெருகும் அறுவடையே!
யுத்தப்பிரியன் செவ்வாயே நீ முருகன் தளபதி
அம்சம்!
சக்தி எனும் உன் ஆயுதமே - வஞ்சகரைச்
செய்யும் துவம்சம்!
மின்னலைப் போலே ஒளிர்பவரே!
மங்களன் என்பதும் உன் பெயரே!
அறுவை சிகிச்சை வெற்றி பெற
உன்னை வணங்கிடுவோம் - உடன்
பிறந்தோர் சிரமம் முற்றுப் பெற
உன்னைப் பணிந்திடுவோம்!

சனி பகவான்

மகரம், கும்ப ராசிக்காரர்கள், சனிக்கிழமை பிறந்தவர்கள், மற்றும் பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்கள் தினமும் சனி பகவானை வழிபட வேண்டும். மற்றவர்கள் சனிக் கிழமையாவது நெய் தீபமேற்றி சனி பகவானை வழிபட வேண்டும்.

பாடல்

வானும் கடலும் உன் நிறமே கரு நீலக் கடவுளே!
சனைச்சரா!
சிவப்புச் சூரியனார் மகனே! நீ கறுப்புக் காக
வாகனனே!

பகலவன் தேவி உஷையின் நிழலாம் சாயாதேவி
உன்தாயே!

சமத்துவசாஸ்தா எமதர்மன் அவன் தமையன்
சனியே!

அருள்வாயே!

காப்பாற்றும் கண்ணன் என்ன
பார் போற்றும் மன்னன் என்ன
யாரானாலும் தவறுகள் செய்தால்
தண்டனை தந்திடும் உன் நோக்கு! - எம் சிரசால்
உன் பாதம் தொட்டோம்! நியாய ஜீவனம்
செய்யத் திட்டம்!
மனதினில் தூய்மை உண்டாக்கு!

கும்பம் மகரம் ராசிகளிரண்டும்
உனக்கே உரித்தாகும்!
ஜீவனம், ஆயுள் தருபவன் சனியே!
எம்மைத் தடுத்தாளும்!

சுக்கிரன்

கன்னிப்பெண்கள், ரிஷபம், துலாம் ராசிக்காரர்கள், வெள்ளிக்கிழமை பிறந்தவர்கள், பரணி, பூரம், பூராடம் நட்சத்திரக்காரர்கள் தினமும், மற்றவர்கள் வெள்ளிக்கிழமையாவது சுக்கிர பகவானை தீபமேற்றி வழிபட வேண்டும்.

பாடல்

முல்லை மலர் போலிருக்கும் வெள்ளை நிறச்
சுக்கிரனே!
இல்லறத்தில் மானுடரைப் பிணைப்பது தான்
உன் திறனே!

கருட வாகனமேறி வந்து
கன்னியர் கவலை குறைத்திடுவாய்
கவிதை பாடல் ஆடற் கலைகளில்
உயரும் ஆற்றல் அளித்திடுவாய்.
மனிதர்களுக்கு வாகன பாக்கியம்
கிடைப்பது சுக்கிரன் திருவுளமே!
பயணியர் ஓட்டுநர் வழிபடப்பயணம்
நல்ல வகையில் அமைந்திடுமே!
சாஸ்திரம் அனைத்தும் அடங்கியிருக்கும்
விரல் நுனியில்!

உன் விரல் நுனியில்!
ஆத்திரம் கொண்ட அசுரர்கள் எல்லாம் உன்
அணியில்!

ஆம்! உன் அணியில்!
பிருகு முனிவரின் புதல்வர் உனக்கு
இன்னொரு பெயர்தான் வெள்ளி!
திருமண வாழ்வில் பெறுவோம் சுகமே
சுக்கிரன் நாமம் சொல்லி!

குரு

தனுசு, மீனம் ராசிக்காரர்கள், வியாழக்கிழமை பிறந்தவர்கள் மற்றும் புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள் தினமும், மற்றவர்கள் வியாழக்கிழமை யாவது குரு பகவானை இப்பாடலைச் சொல்லி தீப மேற்றி வழிபட வேண்டும்.

பாடல்

தேவரும் ரிஷிகளும் பணிந்து வணங்கும்
ஆச்சார்யன் நீ குரு பகவான்!
பாவம் அகற்றும் வல்லமை கொண்டவன்
யானை வாகனன் தேவ மகான்!
மழலைச் செல்வமும் மற்ற செல்வமும்
வழிபடத் தருகிற வியாழன் இவர்
நவக் கிரகங்களில் மிகவும் நல்லவர்!
அருளைப் பொழிகிற தூய சுபர்!
மீனம் தனுசு ராசிகளுக்கு அதிபதியே
ஞானத் தலைவன் நீதானே ப்ரஹஸ்பதியே!
முட்புதர்க் காட்டை பஸ்பம் செய்திடும்
அக்கினி போன்றது உன் பார்வை! - பட்டால்
விலக்கிடும் தோஷம் அனைத்தையும்!
சுகமாய் ஆக்கிடு எம் வாழ்வை!

★★★

நூற்றெட்டு விநாயகர் தரிசனம்

டாக்டர் டி. செல்வராஜ்

1. **பிள்ளையார் பட்டி : கற்பக விநாயகர் - தேசி விநாயகர் :**

இவர் தமிழகத்தின் மிகப்பழைய முதல் விநாயகர் ஆவார். காலம். கி.பி. 5 ஆம் நூற்றாண்டு.

2. **திருச்செங்காட்டங்குடி - வாதாபி கணபதி**

நரசிம்மவர்ம பல்லவனின் படைத்தளபதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்ட நாயனார்) சாளுக்கியரை வாதாபியில் வென்று, அங்கிருந்து இவரைக் கொண்டுவந்து இங்குப் பிரதிட்டை செய்தார் என்று பலரும் கூறுகின்றனர். இவரே ''வாதாபி கணபதி''.

3. **காஞ்சிபுரம் :** கைலாசநாதர் கோயிலில், ஏழு மாதர் திருமேனிகளின் வரிசையில் ஒரு விநாயகரின் திருமேனியும் உள்ளது. இந்த விநாயகரும் பழைமையானவர். மேற்கண்ட அமைப்புமுறை சாளுக்கியருக்கு உரியது. பின்னர்த்தமிழகத்திலும் பரவியது.

4. **திருச்சி - உச்சிப்பிள்ளையார்**

5. **உறையூர் - சோழன்பாறை - முத்துப்பிள்ளையார்.**

இவர்கள் இருவரும் மிக உயரத்தில், மலைமேல் எழுந்தருளியவர்கள்.

6. **விருத்தாசலம் - ஆழத்துப்பிள்ளையார்**

7. **திருக்காளத்தி : பாதாள கணபதி.**

இவர்கள் இருவரும் நிலத்தடி ஆழத்தில் வீற்றிருக்கின்றனர்.

8. **பாண்டிச்சேரி - மணற்குள விநாயகர் -**

அகன்ற நிலப்பரப்பில் அருளாட்சி செய்கின்ற விநாயகரைப் ''புவனேசகணபதி'' எனச்சிறப்பித்துக் கூறுவது வழக்கம். பாண்டிச்சேரி, கடற்கரையில் கோயில் கொண்ட மணற்குள விநாயகர் இச்சிறப்புடையவரே.

நிலப்பரப்பிலும், உயரத்திலும், ஆழத்திலும் எங்கும் நிறைந்தவர் விநாயகர்.

9. **திருவண்ணாமலை (வில்லிபுத்தூர் அருகில்)**

இங்குப் பெருங்காட்சி தருகின்ற விநாயகரது திருமேனி தமிழகத்திலேயே மிகப்பெரியது. இவரது துதிக்கையில் மேடு பள்ளமாக வடிக்கப்பட்ட திருநீற்றுப்பட்டைகள் உற்றுக்கவனிகத் தக்கன.

10. **திருவக்கரை :** இங்குள்ள விநாயகரும் மிகப் பெரியவர்; மிக உயரமானவர்.

11. **மதுரை**

12. **திருவண்ணாமலை**

13. **திருச்செந்தூர் - முக்குறுணி விநாயகர்.**

மன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் விநாயகரது மிகப்பெரிய திருமேனிகளுக்கு முன், முக்குறுணி அரிசியைக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரே கொழுக்கட்டையைப் படைத்தனர். இதனை ஏற்று அருள் தருகின்றவர் முக்குறுணி விநாயகர். இவரைத் 1. திருவானைக்கா 2. காஞ்சிபுரம் (ஏகாம்பரேசுவரர் கோயில்) முதலிய பல தலங்களில் தரிசிக்கலாம்.

14. **விரற்கடை விநாயகர் :** இவர் விரற்கடையளவு உயரமுள்ளவர்; மிகச் சிறியவர். இச்சிறிய திருமேனியைக் கல், மரம், வெள்ளி, செம்பு, கண்ணாடி முதலியவற்றில் வடிக்கின்றனர்.

விநாயகர் பெரிய பொருள்களை விட மிகப்பெரியவர். அணுவுக்கு அணுவாகவும் இருப்பார். மிகச்சிறியவர். கணுமுற்றிய கரும்பின் சுவையாகவும் விளங்குவார். மிக நுட்பமானவர்.

15. **சுசீந்திரம், மதுரை, பவானி - விநாயகி**

இவர் விநாயகரின் சக்தி வடிவம்; பெண்மைக் கோலம். இவரைக் கணேசானி என்றும் கூறுவர். 1. சிதம்பரம் 2. திருச்செந்தூர் 3. திருக்குறுங்குடி 4. நாகர்கோயில் 5. திருநெல்வேலித்தேர் முதலிய இடங்களிலும் விநாயகியைத் தரிசிக்கலாம். யானைத் தலையும், பெண்ணின் உடம்பும், பெண் அல்லது புலியின் கால்களையும் கொண்டவர் விநாயகி.

16. **காஞ்சிபுரம் - திருவோணகாந்தன் தளி :**

ஓங்கார விநாயகர் : இவரது திருமேனிக்கருகில் காதை வைத்து உற்றுக்கேட்டால் ஓங்கார ஒலி கேட்கிறது. ஓங்கார வடிவினர் ஒலிப்பது ஓங்கார ஒலி.



17. வேலூர் - சேண்பாக்கம் - செல்வ விநாயகர் கோயில் - இங்கே பதினொரு சுயம்பு விநாயகர் ஓங்கார வடிவத்தில் அமைந்திருக்கின்றனர்.

18. மருதமலை

19. திருநெல்வேலி - சுயம்பு விநாயகர் - சுயம்பு = உளியால் செதுக்கப்படாமல் தானே தோன்றிய திருமேனிகள். விநாயகரது சுயம்பு திருமேனிகளில் துதிக்கை, கைகள், கால்கள் முதலிய உறுப்புகள் தெளிவாகத் தெரிவதில்லை.

20. திருநறையூர் பொல்லாப்பிள்ளையார் :

பொள்ளா - உளியால் செதுக்கப்படாத சுயம்பு பிள்ளையார், இவர் ''பொல்லாப்பிள்ளையார்'' ஆனார். நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்தவர் இவரே.

21. சென்னை, அரசினர் தோட்டம் - ஆலமரவேரில் விநாயகர் திருமேனி. சுயம்பு.

22. கோயிற்பட்டி - எட்டைய புரச்சாலையருகில் - புளியமர மற்றும் வேப்பமர அடிப்பகுதிகளில் விநாயகர் திருமேனி. இவரும் சுயம்பு.

23. வெள்ளெருக்கு விநாயகர் : வடக்கு நோக்கிச் செல்கின்ற வெள்ளெருக்கு வேரில் விநாயகர் திருமேனியை வடிப்பது சிறப்பு. இருபத்தோர் ஆண்டுகளாக வளர்ந்து முற்றிய வெள்ளெருக்கு வேரில் விநாயகர் திருமேனி தானே உருவாகும் என்பர். இதுவும் சுயம்பு.

24. திருப்புறம்பயம் 1. தேன் உறிஞ்சு விநாயகர் 2. பிரளயம் காத்த விநாயகர்

கடர்பஞ்சு, சங்கு, கிளிஞ்சல்களால் ஆன ஒரே விநாயகர் இவர். இத்திருமேனிக்குத் தேனபிடேகம் செய்தால், அது தேன் முழுவதையும் உறிஞ்சும் தன்மையுடையது. இவர் தேன் உறிஞ்சு விநாயகர். மற்றொருவர் பிரளயம் காத்த விநாயகர். பிரளய காலத்தில் காத்தவர்.

25. திருமணிக்கூடல் - சீர்காழிக்கருகில் - வைணவத் தலம் - நாலாயிரத்தொரு விநாயகர்

இவருக்குச்செய்கின்ற அபிடேகநீர் இவரது சிகைக் குள் நுழைந்து மறைகிறது என்று நம்புகின்றனர். இவர் நீர் உறிஞ்சு விநாயகர்.

26. சேலம் சுகவனேசுவரர் ஆலயம்

27. மதுரை

28. திருப்பரங்குன்றம் இரட்டை விநாயகர் :

கோயில்களிலும் வீடுகளிலும் இரட்டை விநாயகரை வழிபடுவது மிக மிக நல்லது.

ஒரு தெய்வம் அவரது சக்தியுடன் (தேவியுடன்) தரிசனம் தருவது தனிச்சிறப்புடையது. இத்தகைய வடிவத்தைப் போக வடிவம் என்பர். போக வடிவமே பக்தர்களுக்குப் பலப்பல பலன்களை அருளுகின்றது.

இரட்டை விநாயகர் வடிவமும் போக வடிவமே யாம். இரட்டை விநாயகர் திருமேனிகளில் ஒரு திருமேனி விநாயகர்; மற்றொரு திருமேனி அவரது சக்தியின் (தேவியின்) ஆண் வடிவம் ஆகும். போகங்கள் விளைய இவர்கள் இருவரையும் ஒருங்கே வழிபட வேண்டும்.

மேற்கண்ட தலங்களிலும், தஞ்சாவூர், திருநெல்வேலி, சீவலப்பேரி கிராமம் முதலிய பல தலங்களிலும் இரட்டை விநாயகர் தரிசனம் கிடைக்கும்.

மூன்று விநாயகர்

29. கும்பகோணம் - பிரமன் கோயில்

கடைத்தெருவில் - மூன்று விநாயகர்.

30. திருப்பரங்குன்றம் - முதல் நுழைவாயிலின் இடப்பக்கம் - மூன்று விநாயகர்.

பதினாறு விநாயகர் : முத்கல புராணமும், ஸ்ரீ தத்துவ நிதியும் முப்பத்திரண்டு வகைப்பட்ட விநாயகரது திருமேனிகளை வரையறுத்து விவரிக்கின்றன. இவற்றுள் முக்கியமான பதினாறு திருமேனிகள் திகழ்கின்ற திருத்தலங்கள் வருமாறு :-

31. இராமமேசுவரம் - பதினாறு விநாயகர்.

32. சங்கர நயினார் கோயில் - பதினாறு விநாயகர் (ஓவியங்கள்)

பலமுக விநாயகர்

33. பாண்டிச்சேரி - மணற்குள விநாயகர் கோயில் - இருமுக விநாயகர்

34. கந்தகிரி (சேலம்) ஐந்து முக விநாயகர்.

35. திருவொற்றியூர் ஐந்து முக விநாயகர்.

36. புதுக்கோட்டை - இராஜராஜேஸ்வரி கோயில் - ஐந்து முக விநாயகர்.

37. பாண்டிச்சேரி - மணற்குள விநாயகர் கோயில் - ஆறுமுக விநாயகர்

38. சென்னை - தி.நகர் - ஆக்ஸ்போர்டு பள்ளி வளாகம் - பத்துமுக விநாயகர்.

நர (மனித) முக விநாயகர்

39. திருச்செங்காட்டங்குடி - நரமுக விநாயகர்

40. சிதம்பரம் - தெற்கு வீதி - நரமுக விநாயகர்

41. திலதைப்பதி (பூந்தோட்டம் அருகில்) துதிக்கை இல்லாத விநாயகர்.

திருக்கைகள் : வேறு தெய்வங்கள் நான்கு கைகளுடன் விளங்க, விநாயகர் மட்டும் ஐந்து கைகளுடன் வீற்றிருப்பது ஒரு தனிச்சிறப்பு.

42. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் - இவர் இரண்டு கைகளைக்கொண்டவர்.

43. ஹரித்திரா விநாயகர் : இவரை வீடுகளில் எழுந்தருளச்செய்து வழிபடுகின்றோம். நான்கு கைகளில் 1. தந்தம் 2. மோதகம் 3. அங்குசம் 4. பாசம் ஏந்தியவர். துதிக்கையில் இருப்பது அமுதகலசம். 'யானை' தன்னைக்கட்டுப்படுத்தும் அங்குச, பாசத்துடன் அமர்ந்திருப்பது வியப்பே.

44. செய்யாறு - ஏழுகை நர்த்தன விநாயகர்.

45. இராமேசுவரம் - பத்துக்கை விநாயகர்.

46. சங்கரநயினார் கோயில் - பதினாறு கை விநாயகர்.

இவர் கைகளில் பல ஆயுதங்களை ஏந்திய ''வீர விநாயகர்.''

விநாயகர் கைகளில் ஏந்திய பொருள்கள்

	திருத்தலம்	விநாயகர் ஏந்திய பொருள்கள்
47.	பிள்ளையார்பட்டி	லிங்கம்
48.	திருப்பரங்குன்றம்	கரும்புவில்
49.	உடையார் பாளையம்	வில்

50. சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் வெண்ணெய்

51. சென்னை, மாங்காடு வெற்றி விநாயகர் கோயில் மாம்பழம்

52. திருப்பாதிரிப்புலியூர் பாதிரிப்பூக்கள்

53. சேலம், சுகவனேஸ்வரர் கோயில் இருகைகளில் இரு மோதகங்கள்.

54. பவானி (திருநணா) வீணை

55. ஸ்ரீ சைலம் (திருப்பருப்பதம்) குழல்

56. கும்பகோணம் நாகேசுவரர் கோயில் உருத்திராட்ச மாலை.

வாகனங்கள் : பொதுவாக விநாயகருக்கு உரிய வாகனம் மூஞ்சூறு அல்லது பெருச்சாளி ஆகும்.

விநாயகருக்குரிய பிற வாகனங்கள் வருமாறு :

திருத்தலம்	வாகனம்
57. திருவானைக்கா	மயில்
58. பாண்டிச்சேரி	மயில்
59. சுசீந்திரம்	காளை
60. திருநெல்வேலி	காளை
61. திருச்செந்தூர் - ஆவுடையார் குளக்கரை - அரசாள்வார் விநாயகர்-	யானை
62. வில்லிபுத்தூர் - வைத்தியநாத சாமி கோயில் - கல்யாண விநாயகர் -	யானை
63. திருவொற்றியூர்	சிங்கம்
64. விரிஞ்சிபுரம்	சிங்கம்
65. கடலூர் - சென்னப்ப நாயக்கன் பாளையம் - மலையாண்டவர் விநாயகர் -	குதிரை
66. திருப்பரங்குன்றம் - பழைய சொக்க நாதர் கோயில் - விநாயகர் -	பூதம்

விநாயகரின் திருக்கோலங்கள் : விநாயகர் சுகாசனம், பத்மாசனம், அர்த்தபத்மாசனம் முதலிய எட்டுவிதமான ஆசனங்களில் வீற்றிருக்கின்றார் என்பர். இவரது அபூர்வமான திருக்கோலங்கள் சில வருமாறு :-

67. தாடிக்கொம்பு - சௌந்தர ராச பெருமாள் கோயில் - நின்ற கோல விநாயகர்

68. செய்யாறு - நர்த்தன விநாயகர்

69. மதுரை - கால்மாறி ஆடுகின்ற நர்த்தன விநாயகர்

70. மதுரை - ஊர்த்துவ நர்த்தன விநாயகர்

71. வேலூர், கல்யாண மண்டபம் - ஸ்ரீ கிருஷ்ணனைப் போலத்தவழ்கின்ற விநாயகர்.

72. திருப்பரங்குன்றம் - போருக்குப் புறப்படுகின்ற விநாயகர்.

1) சென்னை கந்தகோட்டம், பேரூர், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய பல திருத்தலங்களில் நர்த்தன விநாயகரது திரு மேனிகள் உள்ளன.

2) தாராசுரக்கோயிலில் ஓரங்குலம் முதல் ஓரடி வரை பல அளவுகளில் நர்த்தன விநாயகரின் திருமேனி களைத் தரிசிக்கலாம்.

3) சிவன் கோயில்களில் தென்புற முதற்கோட்டத் தில் இருப்பவர் நின்ற கோல விநாயகர்.

4) சென்னை, திரிசூலத்தில் விநாயகர் தாமரைப் பீடத்தின்மீது வலக்காலைக்குத்திட்டு, இடக்காலை மடித்து அமர்ந்த கோலம் மிக நேர்த்தியானது; அபூர்வ மானது.

73. நாகப்பட்டினம்

74. பாபநாசம்.

நாகம் குடைபிடிக்க வீற்றிருக்கின்ற நாகாபரண விநாயகர்.

75. திருவாரூர் - ஐந்தலை நாகத்தின் மீது நடமாடும் விநாயகர்.

76. சென்னை திரிசூலம் - நாகத்தைப் பூணூலாகப் புனைந்த விநாயகர்.

77. சங்கர நயினார் கோயில் - நாகமேந்திய விநாயகர்.

விநாயகர் திருமேனிகளில் கச்சாக இருப்பது நாகம்.

வண்ண வண்ண விநாயகர்கள்

78. கேரளபுரம் - குமரி தக்கலை யருகில் - நிறம் மாறு விநாயகர் - இவர் ஆவணி முதல் ஆறு மாதம் வெள்ளை நிறத்துடனும், மாசி முதல் ஆறு மாதம் கருப்பு நிறத்துடனும் காட்சி தருவது மிக வியப்புக்கு

ரியது. நிறம் மாறும் இத்திருமேனி சந்திர காந்தக் கல்லால் அமைந்தது என்பர்.

79. திருவலஞ்சுழி - சுவேத (வெள்ளை) விநாயகர். கடல் நுரையால் செய்யப்பட்டவர்; ஒன்பது அங்குல உயரமுடைய மிகச்சிறிய மூர்த்தி.

80. திருவண்ணாமலை - செங்காவி விநாயகர்

81. சின்னம்பேடு (சிறுவாபுரி) - மரகதப்பச்சை விநாயகர்.

82. மஞ்சாடி கிராமம் - நாகப்பட்டினம் திருவாரூர் சாலையில் - மஞ்சள் விநாயகர்.

போசனப்பிரியா : சிவபெருமான் அபிடேகப் பிரியர்; நாராயணன் அலங்காரப்பிரியர்; அம்மன் அர்ச்சனைப்பிரியர்; முருகன் பஞ்சாமிர்தப்பிரியர்; ஐயப்பன் விரதப்பிரியர்; விநாயகர் மோதகப்பிரியர் போசனப்பிரியர். ஆகவே, இவரது பெயருடன் உணவு வகைகளின் பெயர்களை இணைத்து வழங்குவது மிகவும் பொருத்தமாகவே இருக்கின்றது.

83. திருநெல்வேலி - அம்பலவாணர்புரம் - உழக்கரிசி விநாயகர்

84. கும்பகோணம் - கரும்பாயிரம் கொண்ட விநாயகர்

85. திருக்காறாயில் - திருவாரூருக்கு அருகில் - கடுக் காய்ப்பிள்ளையார்

86. திருநெல்வேலி - பேட்டை - சர்க்கரை விநாயகர்

87. குணதலப்பாடி - கதிராமங்கலம் அருகில் - வெல்லப்பிள்ளையார்

88. சேரன்மாதேவி - மிளகு பிள்ளையார்

89. திருச்சி - தெப்பக்குளத்துக்கு அருகில் - வாழைப்பழ விநாயகர்.

மேற்கண்ட பெயர்களுக்குத் தகுந்த கதைகளும், காரணங்களும் இருக்கின்றன.

90. க்ஷண விநாயகர் : ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது காலத்தில் வழிபடக் 1. களிமண் 2. புற்று மண் 3. சந்தனம் 4. மஞ்சள் 5. திருநீறு 6. சாணம் 7. மாவு 8. காகிதக்கூழ் 9. சுண்ணாம்புக்கூழ் முதலிய வற்றால் செய்யப்படுகின்ற விநாயகர், ''க்ஷண விநாயகர்'' ஆவார். பக்தர்கள் வெறும் காய்கறி களைக் கொண்டே விநாயகர் திருமேனியை உருவாக்கிச் சாதனை செய்தனர்.

பலவகை விநாயகர்

91. பொன்னேரி - சின்னகாவனம் - சிவன் கோயில் - இறுகிய மண் விநாயகர்

92. கும்பகோணம் - கும்பேசுவரர் கோயில் - மர விநாயகர்

93. பேலூர் (கர்நாடகம்) - சந்தனமர விநாயகர்

94. திருவாரூர் - ஐங்கலக்காசு விநாயகர்.

95. திருநல்லூர் - சாலிக்கிராம விநாயகர். இங்கே ''சாலிக்கிராமம்'' என்ற அபூர்வமான, அதிசயமான கல்லை விநாயகராக வழிபடுகின்றனர். திருநல்லூர் லிங்கேசுவரர் ஒவ்வொரு நாளும் ஐந்து வண்ணங் களுடன் மாறி மாறிக்காட்சி தருவது மற்றோர் அதிசயம். இவர் ''பஞ்சவண்ண ஈசுவரர்''.

96. திருவரங்கம் - தும்பிக்கை ஆழ்வார். இவர் நெற்றியில் திருநீற்றையும், திருநாமத்தையும் ஒருங்கே புனைந்து சேவை சாதிக்கின்றார்.

97. மதுரை - கீழமாசி வீதி - மொட்டை விநாயகர். பொதுவாக, பின்னப்பட்ட, சிதைந்த, குறையுடைய தெய்வத்திருமேனிகளை வழிபடக்கூடாது. ஆனால் அத்தகைய குறைகளையுடைய விநாயகரது திரு மேனிகளை வழிபடலாம். குற்றமில்லை.

மதுரை கீழ மாசி வீதியிலுள்ள விநாயகர் திரு மேனியின் முகம், கை, கால்கள் சிதைந்துள்ளன. இருந்தாலும் இவரை ''மொட்டை விநாயகர்'' என்று அன்புடன் அழைத்துப் பக்தியுடன் வழிபடுகின்றனர் பக்தர்.

98. சென்னை - வேளச்சேரி - விளையாட்டு விநாயகர். பழங்காலத்தில் வீரர்கள் வாள் போர், மற்போர், குதிரையேற்றம், சிலம்பாட்டம் முதலிய வீர விளையாட்டுகள் பலவற்றில் ஈடுபட்டனர். பயிற்சி களின் போது இடையூறுகள் ஏற்படாதிருக்கவும், போட்டிகளிலும், போர்களிலும் வெற்றி பெறவும் அவர்கள் வழிபட்ட தெய்வமே விளையாட்டு விநாயகர். இவரை வேளச்சேரியிலும் வேறு பல ஊர்களிலும் தரிசிக்கலாம்.

99. தாமாணங்குடி கிராமம் : இது காரைக்காலைச் சார்ந்த கிராமம். இங்கே பெரிதும், சிறிதுமான இரண்டு விநாயகர் திருமேனிகள் இருக்கின்றன.

ஒருவர் பிரெஞ்சு விநாயகராம்; மற்றொருவர் இங்கிலீஷ் விநாயகராம்.

100. கோவை - ''டிரான்ஸ்பர்'' விநாயகர்.

கோவை, வஞ்சிப்பாளையத்திலிருந்து திருப்பூர் செல்லும் வழியில் ஒரு மேடையின் மீது விநாயகர் இருக்கிறார். பக்தர் இவரிடம் வேண்டினால், அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாற்றம் (Transfer) கிடைக்குமாம். இவரைட் டிரான்ஸ்பர் விநாயகர் என்றே அழைக்கின்றனர்.

101. ஹம்பி : இங்குச் சிறப்பான விநாயகர் சிலைகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று பத்தடி உயரம். இதற்குக் கசிவு கல்லு விநாயகர் என்பது பெயர். கசிவு = கடுகு. இவர் கடுகளவு உள்ள விநாயகராம். மற்றொன்று இருபதடி உயரம். இதற்கு 'கடலைக் கல்லு' விநாயகர் என்பது பெயர். கடலைப்பருப்பு அளவானவர் இவர்.

''வாஸ்தவத்தில் விச்வரூபியான அவருக்கு விக்ரஹம் பண்ண எவராலும் ஆகாது. முடிந்த அளவுக்கு இங்கே பண்ணி வைத்திருக்கிறோம். அது அவருடைய நிஜமான ரூபத்தோடு ஒப்பிட்டால் கடுகத்தனை, கடலையத்தனையாகத்தான் தெரியும் என்று அடக்கத்தோடு இப்படிப்பேர் வைத்திருக்கிறார்கள்.'' காஞ்சி ஸ்ரீ மகாப்பெரியவரின் அருள்மொழி.

102. லிங்க விநாயகர் : திருவானைக்காவில் லிங்கத்திலுள்ள விநாயகரைத் தரிசிக்கலாம்.

103. திருநெல்வாயில் அரத்துறை : இங்கே வலம்புரி விநாயகர் தட்சிணாமூர்த்தியாக வீற்றிருப்பது ஒரு சிறப்பம்சம்.

104. குறிக்கத்தக்க விநாயகர் :

1.	கும்பகோணம் (நாகேசுவரம்)	-	கங்கை கணபதி
2.	தென்காசி	-	லட்சுமி கணபதி
3.	சேலம்	-	ராஜ கணபதி
4.	திருக்கடவூர்	-	கள்ளவாரணப் பிள்ளையார்
5.	சிதம்பரம்	-	திருமுறைகாட்டிய விநாயகர்
6.	திருவாரூர் விருத்தாசலம்	-	மாற்றுரைத்த விநாயகர்.
7.	சென்னை கந்தகோட்டம்	-	சித்திபுத்தி விநாயகர்
8.	அன்பில் (லால்குடி அருகில்)	-	செவிசாய்த்த விநாயகர்
9.	திருப்பனையூர்	-	பொற்காசு விநாயகர்
10.	திருமுருகன்பூண்டி	-	கூப்பிடு விநாயகர்
11.	திருவையாறு	-	ஓலமிட்ட விநாயகர்

105. திருக்கோவலூர் விநாயகர் : தமிழகம் முழுவதும், கடல் கடந்தும் விநாயகர் வழிபாடு பரவுவதற்கு அவ்வையார் முக்கியக் காரணமாவர். இவர் திருக்கோவலூர் விநாயகரின் திருமுன் ''விநாயகர் அகவலை'' இயற்றி அவரது பேரருளைப்பெற்றார்.

106. ஈச்சனாரி விநாயகர் - கோவைக்கருகில் - இவர் ஆண்பாதி பெண்பாதியாக வீற்றிருக்கின்ற விநாயகர். தினமும் உச்சநிலை அலங்காரங்களுடன் பொலிகின்ற விநாயகர் இவர் ஒருவரே. இருபத்தேழு நட்சத்திரங்களில், ஒவ்வொரு நட்சத்திர நாளன்றும் ஒவ்வொரு முறையில் அலங்கரிக்கின்றனர். இத்தகைய அலங்காரம் வேறு எந்தத்தலத்திலும், வேறு எந்தத்தெய்வத்திற்கும் இல்லை.

107. சென்னை, அடையாறு, மத்திய கைலாஸ் ஆலயம் ஆதியந்தப்பிரபு ஆதி - முதல் வழிபாட்டிற்கு உரியவர் விநாயகர்; அந்தம் - நிறைவு வழிபாட்டிற்கு உரியவர் அனுமன். ''பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது'' என்ற பழமொழியும் இதே கருத்தை உணர்த்துகிறது. அர்த்தநாரி, சங்கர நாராயணர் என்ற இரட்டைத்தெய்வத் திருமேனிகளைப்போல், விநாயகர் வலப் பக்கமும், அனுமன் இடப் பக்கமும் இணைந்து அமைந்த திருமேனியே ''ஆதியந்தப்பிரபு.'' இவரை மத்திய கைலாஸ் ஆலயத்திலும், சேலம் கந்தகிரியிலும் தரிசிக்கலாம்.

108. நூற்றெட்டு விநாயகர் தரிசனம் : காரைக்குடி, சிவன் கோயில் திருக்குளத்தில் கிழக்குக் கரையில் நூற்றெட்டு விநாயகர் தரிசனம் தருகின்றனர்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் : இங்கும் நூற்றெட்டு விநாயகர்திருமேனிகள் உள்ளன.

விநாயகரை வழிபட சகல நலங்களும் பெற்று உய்வடையலாம் என்பது திண்ணம்.

★★★

புதுமைகள் பலபொலியும்

சேலம் அருள்மிகு அன்னதானப்பட்டி மாரியம்மன் திருக்கோயில்

''திருக்கோயில் வெளியீடு''

கஞ்சமலை, சேர்வராயன்மலை முதலிய குன்று சூழ்ந்த நகரம் சேலம் நகரம். சேர மன்னனால் செய்யப் பெற்றமையின் சேலம் என்ற பெயர் பெற்றது என்று கொங்கு மண்டல சதகம் இயம்புகிறது.

கனிவள சிறப்பும் இனிய மாங்கனி சிறப்பும் பெற்ற இந்நகரில் அமைந்த ஓர் ஊர் அன்னதானப்பட்டி அன்ன தானத்தில் சிறப்புற்றது.

பசி என்று வருவோரை அன்புடன் உபசரித்து பசியாற்றிய புனித தன்மையினை கடந்த காலங்களில் இப்பகுதி மக்கள் சிறப்பாக செயல்படுத்திய காரணத்தால் இந்நகர் அன்னதானப்பட்டி என்ற திருப்பெயர் பெற்றது என்று சொன்னால் அஃது மிகையாகாது.

தமிழ்நாட்டில் பொங்கல், தமிழ் புத்தாண்டு, விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை, தீபாவளி முதலிய பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடுகிறார்கள். சேலம் நகரில் உள்ள மக்கள் அனைவரும் கொண்டாடும் சிறப்பான ஒரே பண்டிகை மாரியம்மன் ஆடிப்பெரு விழா ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் ஆடி 18ஆம் பெருக்கை அடுத்து கொண்டாடப்படும் மாரியம்மன் திருவிழாவை ஆடிப்பெருவிழா என்று அழைக்கிறார்கள். இவ்விழா சேலம் மாநகருக்கு மாபெரும் திருவிழா ஆகும். அம்பிகைக்கு உகந்த மாதம் ஆடி மாதம் என்றாகும். இந்த ஆடி மாதத்தில் அம்பாளுக்கு விழா எடுத்து வழிபடுதல் என்பது சிலப்பதிகார காலம் முதல் கொண்டு வரும் வழக்கமாகும்.

சேலம் நகரில் ஏழு பேட்டைகளில் (ஊர்கள்) ஒரே நாளில் ஒரே நேரத்தில் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக காலம் காலமாக நடைபெற்று வருகிறது. கோட்டை மாரியம்மன், செவ்வாய்பேட்டை மாரி யம்மன், குகை மாரியம்மன், அன்னதானப்பட்டி மாரி யம்மன், அம்மாப்பேட்டை மாரியம்மன், குமாரசாமிப் பட்டி மாரியம்மன், சின்ன மாரியம்மன் என ஏழு தலங் களில் இம்மாநகரில் அன்னை குடிகொண்டு விளங்கு கிறாள்.

ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன் சுமார் நூறு குடிசைகள் மட்டுமே கொண்ட குக்கிராமமாக இவ்வூர் அன்னதானப்பட்டி விளங்கி வந்தது. இவ்வூர் மக்கள் திருமணி முத்தாற்றின் நீர் கொண்டு உழவு தொழில் செய்து அமைதியுடன் வாழ்ந்தனர். இவ்வினிய மக்களிடையே கோயில் கொள்ள அன்னை மாரி யம்மன் திரு உள்ளம் கொண்டாள்.

வடபுலத்தில் கொடிய பஞ்சம் தாண்டவம் ஆடியது. வடபுலத்து மக்கள் பஞ்சத்தின் கொடுமை தாளாது தென்புலத்தில் குடியேற வந்தனர். அப்படி வந்தவர்களில் ஒரு தம்பதியினர் தலையில் உணவுக் கூடை சுமந்து வந்தனர். குடிநீர் இருக்கும் இடத்தில் உணவு கூடையை இறக்கி உணவு உண்ண தொடங்கும் கால் உணவுக் கூடையில் குழவிக்கல் ஒன்று இருக்க கண்டனர். குழவிக்கல்லை எடுத்து எறிந்து விட்டு உணவு உண்டனர். மீண்டும் பயணம் தொடர்ந்தனர். அடுத்த குடிநீர் இருக்கும் இடத்தில் உணவு கூடையை இறக்கிப் பார்த்த போது மீண்டும் குழவிக்கல் கூடையில் இருக்கக் கண்டனர். கணவன் மனைவியை கடிந்து கொண்டதுடன் இக்கல்லை ஏன் மீண்டும் கொண்டுவந்தாய் என்று கேட்டார். மனைவியோ செய்வது அறிவாது திகைத்தாள். இறுதியில் அவர்கள் அன்னதானப்பட்டி வந்தனர். திருமணி முத்தாற்றில் நீர் ஓடுவதைக்கண்டு உணவு அருந்த உணவுக் கூடையை இறக்கினர். மீண்டும் கூடை யில் குழவிக்கல்லைக் கண்டு கடும்கோபம் கொண்டனர். ''இது என்ன மாயம்? மந்திரம்!'' என்று எண்ணி சிறிது குழி பறித்து அந்த குழவி கல்லை நட்டு, ''எங்களுடன் இனி வருதல் வேண்டாம்'' என்று சொல்லிச் சொல்லி செருப்பாலும், முறத்தாலும், விளக்குமாற்றாலும் மாற்றி மாற்றி அடித்து விட்டு தங்கள் பயணத்தை தொடர்ந்தனர்.

அன்று இரவு ஊரார் கனவில் அன்னை தோன்றி னாள். ''நான் இங்கே கோயில் கொண்டுள்ளேன். உங்கள் துயர் துடைக்க வந்துள்ளேன்'' என்று திருவாய் மலர்ந் தாள். விடிந்ததும் மக்கள் திரண்டனர். நடப்பட்ட கல்லை யும் அருகே செருப்பு, முறம், விளக்குமாறு ஆகியவை இருப்பதையும் கண்டு அதிசயித்தனர். உடனே மேற்படி தெய்வத்திற்கு நிழல் கூரையை அமைத்து பெரியதனக் காரர்களான, வன்னிய குல சத்திரிய சமூகத்தினர், சோழிய வேளாளர் சமூகத்தினர், பர்வதராஜ குலத்தினர் ஒன்று சேர்ந்து அம்மனை வழிபட ஆரம்பித்தனர்.

திருமணி முத்தாற்றில் நீராடி ஆற்றங்கரையில் அமைந்துள்ள சித்தி விநாயகரை வழிபட்ட பின், மாரி யம்மனை வழிபடுதல் வழக்க மாயிற்று. எல்லா அம்மன் திருத்தலங்களிலும் அம்பாளுக்கு வலது புறமாக விநாயகர் கோயில் இருக்கும். இங்கு அம்பாளுக்கு இடது புறமாக இருப்பது இக்காரணம் கொண்டே என்று அறிய வருகிறது.

இந்நிலையில் காவேரிப்பட்டினத்தில் இருந்து மௌன சாமியார் (வாய் பேசாதவர்) என்ற துறவி அன்னதானப்பட்டிக்கு வருகை தந்தார். திருக்கோயிலின் திருப்பணிக்கு வித்திட்டவர் அவரேயாவர். அன்னைக்கு ஆலய திருப்பணிகள் தொடங்கின. அவர் சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இங்கு தங்கி கருங்கல் திருப்பணிகளை செய்தார். மௌனத் துறவி சிலை வடிக்கும் திருப்பணியை தானே செய்தார். அன்று ஒருவரும் பார்க்கா வண்ணம் திரை அமைத்து ராஜாளி கல்லில் சிலை வடித்து கருவறையில் பிரதிஷ்டை செய்தார். அன்னையும் திருக்கோயில் கொண்டு அருள் பாலித்துக் கொண்டுள்ளார்.

இத்திருக்கோயில், இப்பகுதியில் உள்ள வன்னி யர், சோழிய வேளாளர், பர்வத ராஜ குலத்தார் ஆகிய மூன்று சமூகத்தை சார்ந்தவர்கள் உழைப்பாலும், மௌன சாமியாரின் துணை கொண்டும் உருவாக்கப்பட்ட தல மாகும். வன்னிய சமூகத்தாரின் பொருள் உதவியுடன் வன்னியர் அருணாசல நாயகர் அவர்கள் முன்னின்று மகா மண்டபத்தை கருங்கல் திருப்பணியாக செய்து முடித்தார். ஆலயம் அமைக்கும் போது, திரு. சொ. அருணாசல நாயகர் அவர்களும், திரு. முனியபிள்ளை அவர்களும் திரு. சின்னுசாமி பக்தர் அவர்களும் மற்றும் பெரியோர்களும் கோயில் கட்டும் பணியில் உறு துணையாக இருந்தனர்.

அன்று அன்னை இவ்வூரில் எழுந்தருளியதை கொண்டாடும் வகையில் ஆண்டு தோறும் ஆடிப் பெரு விழாவில் பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாள் வண்டி வேடிக்கையன்று ஒரு நாள் மட்டும் எந்த ஊரிலும் இல்லாத ஒரு சிறப்பாக ''செருப்படி திருவிழா'' நடை பெறும். அன்றைய தினம் வேண்டுதலைக் காரர்கள் தட்டில் செருப்பு, விளக்குமாறு, முறம், வேப்பந்தழை ஆகியவற்றை வைத்து, பக்தர்கள் தாங்களே வந்து காணிக்கை செலுத்துபவர்களுக்கு மூன்று முறை சிரசில் நீவி விட்டு திருநீறு அணிவிப்பார்கள். அவ்வாறு தாங்களாகவே வந்து நீவிக் கொள்பவர் ஏராளம்! இவ்விதம் பிரார்த்தனை நிறைவேற்றிக் கொள்வதால், தங்களைப் பிடித்த பிணி நீங்குவதாக பக்தர்கள் நம்பு கிறார்கள். பிணி நீங்கியதாக இன்றும் பலர் கூறுகிறார்கள். பல்வேறு ஊர்களில் இருந்து இதற்காகவே வருகிறார்கள். இவ்விழா, சேலம் நகரில் மற்ற பேட்டைகளில், ஏன் தமிழகத்திலேயே எங்கும் நடைபெறுவதில்லை யெனலாம்.

பக்தர்கள் மேற்படியாக தம் பிரார்த்தனை நிறை வேற்றுவதால் தத்தம் ஆணவமலம் நீங்கும் எனத் தெளிவுறுக. மேற்படி செருப்படி திருநாளை அன்றைய டிப்டி இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீசாக இருந்த திரு சாத்தப்பிள்ளை என்கின்ற கிருத்தவர் செருப்பால் அடிப்பது ஓர் கிரிமினல் குற்றம்; அதனால் அதை தடை செய்வதாக அறிவித்தார். அன்று இரவே அவருடைய மூத்த மகனுக்கு ''அம்மை'' கண்டது. மறுநாள் அம்மகன் இறந்து போனான். மனம் வருந்திய சாத்தபிள்ளை கோயிலுக்கு வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார். செருப்புடன் வேப்பிலையும் சேர்த்துக் கொள்ளும்படி சொன்னார். அன்று முதல் இன்று வரை மேற்படி பண்டிகையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த நிகழ்ச்சி நடைபெறும் என்றும் இதற்கு விருப்பம் இல்லாதவர்கள் ஊர் எல்லையை தாண்டி விட வேண்டும் என்றும் தண்டோரா மூலம் எல்லோருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

அன்று அன்னை திருமணி முத்தாற்றின் கரையில் வீற்றிருந்ததை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொங்கல் அன்று காலையில் திருமணி முத்தாற்றிற்கு சென்று சேற்றைப் பூசிக்கொண்டு வந்து அம்பாளை தரிசிப்பார் கள். இதை சேத்து முட்டி என்று சொல்வார்கள். இவ் விழாவும் வேறு பேட்டைகளில் இல்லை.

ஆண்டு தோறும் பொங்கல் அன்று மணியனூரில் இருந்தும் மேட்டு வெள்ளாள தெருவிலிருக்கும் உள்ளூர் மக்களும் பெரும் அளவில் அலகு குத்திக் கொண்டு வந்து அம்மனை வழிபடும் காட்சி மெய் சிலிர்க்க வைப்பதாகும். கோட்டை மாரியம்மன் மக்கள் தொகையில் (ஜனத்தில்) பெருத்த மாரியம்மன் என்றும், செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் லட்சக்கணக்கில் ஆபரணங்கள் பூட்டிய வண்ணம் திருவீதி உலா வரும் போது செல்வத்தில் (பணத்தில்) கொழித்த மாரியம்மன் என்றும், ஆபரணங்களை பூட்டினாலும் பூட்டா விட்டாலும் அன்னதானப்பட்டி மாரியம்மனை அழகில் சிறந்தவள் என்றும் எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆடிப்பெருவிழாவின் போது அனைத்து சமூகத்தினரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கட்டளைகளை ஏற்று மிகவும் சிறப்பாக செய்து வருகிறார்கள். மாம்பழம் என்றாலே சேலத்து நினைவு வரும். சத்தாபரணம் என்றாலே சேலத்தில் உள்ள அன்னதானப்பட்டி மாரியம் மன் நினைவு வரும். சத்தாபரணத்தில் தனக்கென தனியாக ஓர் இடத்தை கொண்டுள்ளதுதான் நம் அன்ன தானப்பட்டி மாரியம்மன். ஆடிப்பெருவிழா சேலத்தில்



உள்ள ஏழு பேட்டைகளில் நடைபெறுகிறது. குகை மாரியம்மன் வண்டி வேடிக்கையில் சிறப்பான ஓர் இடத்தை பெற்றதுபோல் அன்னதானப்பட்டி மாரியம் மன் சத்தாபரணத்தில் தனக்கென ஓர் முத்திரை பதித் துள்ளது.

1) அன்னதானம் செய்து புகழ் பெற்ற இத்திருத் தலம் இவ்வன்னதானப்பட்டி என்பது தலச் சிறப்பாகும்.
2) திரு மூலநாயனாரின் சீடரான காளங்கி சித்தர் தங்கி இருந்த திருமணி முத்தாறு என்பது தீர்த்த சிறப்பாகும்.
3) தானே விரும்பி வந்து கோயில் கொண்டு அன்பால் அருள் பாலிக்கும் அன்னை என்பது மூர்த்தி சிறப்பாகும்.

மனம் உருகி தன்னை வழிபடும் அன்பர்கள் அனைவருக்கும் தன்னுடைய அன்பு பார்வையினால் அருள் பாலிக்கும் அன்னை எங்கள் அன்னதானப்பட்டி அருள்மிகு மாரியம்மன்.

காலம் அறிவாள்
கருணை புரிவாள்
கற்பக விருட்சம் எங்கள் (சேலம்)
அன்னதானப்பட்டி மாரி!

பவ ஆண்டு ஆனித் திங்கள் 5ம் நாள் (19-6-1994) ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு மேல் 10-00 மணிக்குள் இத்திருக்கோயிலில் உள்ள அருள்மிகு விநாயகர், அருள்மிகு மாரியம்மன், அருள்மிகு திரௌ பதியம்மன் கோயில்களுக்கு ஒரே ஆண்டுக்குள் திருப்பணி செய்து ஒரே நாளில் ஒரே நேரத்தில் மூன்று திருத்தலங்களுக்கும் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பட்டி தொட்டிகளில் எல்லாம் ஒலி நாடாவில் (டேப்பில்) ''சேலத்திலே அன்னதான மாரி'' என்று ஒலிக்கும் புகழுக்குச் சொந்தக்காரி எங்கள் அன்னதானப்பட்டி மாரி.

அன்னதானப்பட்டி மாரியம்மன் கோவிலுக்கு உபகோயில்கள்

1. அன்னதானப்பட்டி விநாயகர் கோயில்
2. அன்னதானப்பட்டி திரௌபதியம்மன் கோயில்
3. அன்னதானப்பட்டி அங்காளம்மன் கோயில்
4. வாய்க்கால் கரையில் அம்சாரி அம்மன் கோயில்
5. நெத்திமேடு ஊஞ்சக்காட்டு முனியப்பன் கோயில் (காவல் தெய்வம்)

அன்னதானப்பட்டி மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் சேலம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி நெத்திமேடு மாநகராட்சி ஆரம்ப பள்ளி ஆகியவை கள் (1897-1997) ஒரு நூற்றாண்டு காலமாக இயங்கி வருகிறது.

இவ்வாறு அனைத்து பெருமைகளையும் பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகளையும் பெற்று அன்னதானப்பட்டியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அன்னை ஆதிபராசக்தி, அருள்மிகு அன்னதானப்பட்டி மாரியம்மன் திருவடி தொழுது பிறவிப்பெரும் பயனை பெறுவோமாக.

★★★

ஆஞ்சநேயா ஆத்மநேயா!

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

அஞ்சாத நெஞ்சுடைய ஆஞ்சநேயா!
அஞ்சலிக்க அருள்புரியும் ஆத்மநேயா!

சஞ்சீவி மலைகொணர்ந்து 'தம்பி'க்கு மருந்தளித்து,
சஞ்சலங்கள் தீர்த்துவைக்கும் "சஞ்சீவி" ஆகிநின்றாய்,
அஞ்சிஅஞ்சி அவதியுறும், அவனியிலே மாந்தரெலாம்,
தஞ்சமென வந்தடைந்தால், சஞ்சலங்கள் தீர்த்திடுவாய். (அஞ்சாத....) 1

விளங்காதோர் விளங்கவைக்க விஸ்வரூபம் நீஎடுத்தாய்,
விளங்காத வேதபாடம் விளங்கவைக்க வாழ்ந்தாய் நீ,
உளமார உனைத்துதிப்போர் 'உயர'வைக்க அருள்புரிவாய்,
களங்கமிலா அன்புடையோர் காவலுக்கு நீவருவாய். (அஞ்சாத...) 2

ராமனுக்குத் தூதனாகி, லங்கதகனம் செய்தாய் நீ,
ராமபாணம் தீமைகளை, நசுக்கிவிட வழிவகுத்தாய்,
ராமநாமம் எதிரொலிக்க ஞாலமெலாம் சுற்றிவந்தாய்,
'ராமஜெயம்' சொல்வோர்க்கு நலம்பெறுக வழிசெய்தாய்! (அஞ்சாத....) 3

நம்பினோரைக் கைவிடாது, நலம்பலவும் தந்திடுவாய்,
நாடிஉன்றன் அடிசேர்வோர், நன்மைஒன்றே கண்டிடுவார்,
அம்புவியில் உன்னடியார் அயராது, அகலாது,
அர்ச்சிக்கும் உன்நாமம் அவனியெலாம் எதிரொலிக்கும். (அஞ்சாத....) 4

நெஞ்சுக்குள் நீபுகுந்தால் அற்புதங்கள் நிகழ்ந்துவிடும்,
பஞ்சுக்குள் தீபோலப் மறைந்துவிடும் துன்பமெலாம்,
பஞ்சங்கள் ஓடிவிடும்; பலம்பெருக வளம்பெருகும்,
வஞ்சகங்கள் ஒழிந்துவிடும்; வலிமைமிகும் வாழ்வளிப்பாய். (அஞ்சாத....) 5

வெற்றிதரும் வீரன் நீ; விவேகத்தில் சூரன்நீ,
சுற்றிவரும் தீமைகளைச் சுட்டெரிக்கும் தீயும் நீ,
குற்றமற்ற கொற்றவன் நீ, குலம்காக்கும் தெய்வம் நீ,
பற்றிவரும் பெரும்நோய்கள் பறந்தோடச் செய்வாய் நீ, (அஞ்சாத....) 6

உன்இனத்தில் மனிதஇனம் உதித்துவந்த உண்மைக்கதை,
உணர்த்தவந்த அற்புதத்தின் உருவம் நீ ஜெய் அனுமான்,
என்மனத்தில் என்றென்றும், எழுந்தருளி எனைக்காத்து,
இன்பதுன்பம் இனம்காட்டி, இராமர்அடி சேர்த்தருளே! (அஞ்சாத ...) 7





திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 15.8.2003 அன்று சுதந்திரத் திருநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு நிதியமைச்சர் திருமிகு சி. பொன்னயன் அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். நம் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. மற்றும் அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. அவர்களும், கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி. பி.எல். அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

பதிவு எண். TN/PMG (CCR) / 707 / 03-05/WPP No 451

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் ஏப்ரல் மாதச் சம்பளத்தைச் சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், மே மாதச் சம்பளத்தைத் திருவெள்ளறை அருள்மிகு புண்டரிகாட்சப் பெருமாள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், ஜூன் மாதச் சம்பளத்தை ஏந்தல் அருள்மிகு நீலகண்டப் பிள்ளையார் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும் வழங்குகிறார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.